# அகதி

இதழ் 7 1995

## "முஸ்லிம்களைஅவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது எங்களுடைய கடமை"

-அண்டன் பாலசிங்கம்-

### வரவேற்பு

இரத்தச் சிவப்பேறிப்போன
பூமியெங்கும்
வெள்ளைப்பூக்களின் அணிவகுப்பு!
யுத்த வெளியெங்கும்
சமாதானப்புறாக்களின்
சிறகசைப்பு..
சமாதானம்-
மனிதர்கள் உச்சரிக்கத்
தொடங்கியிருக்கிற வார்த்தை.
வரவேற்கிறோம்.
இருப்பைத் தொலைத்த
எங்கள் வாழ்வும்
ஒளிபெற வேண்டி
வரவேற்கிறோம்.
எம்முடைய தாயகத்தில்
எமக்கான இருப்பிடத்தில்
மீண்டுமொரு வாழ்வு வர
வரவேற்கிறோம்.
சமாதானமே வருக
மிக விரைந்து வருக!

இப்னுஸுபைதா

---

* வடமாகாண முஸ்லிம்களின் இன்றைய நிலை

* என்ன விலை கொடுத்தாவது நாம் ஒன்றுபடுவோம்"

* முல்லைத் தீவு மாவட்ட முஸ்லிம்கள் அன்றும் இன்றும்

---

விலை ரூபா பத்து

**எம்முடைய தாயகமும் வடக்கே**

# இவ்வுலக வாழ்வின் இன்பம் வெகு அற்பமானதே

(நிராகரிப்பாளர்களே) நீங்கள் தேடியது வெற்றியாயின், அந்த வெற்றி உங்கள் முன் வந்துவிட்டது. (எனினும் அது உங்களுக்கல்ல; விசுவாசிகளாகிய எங்களுக்கே! நாங்கள் தாம் உங்களை வெற்றி கொண்டோம். ஆகவே, விஷமம் செய்வதிலிருந்து) இனியேனும் நீங்கள் விலகிக் கொண்டால், அது உங்களுக்கே நன்று. இனியும் நீங்கள் (விஷமம் செய்ய) முன்வரும் பட்சத்தில் நாமும் முன்வருவோம். உங்களுடைய கூட்டம் எவ்வளவு பெரியதாக இருந்த போதிலும் (அது) உங்களுக்கு யாதொரு பலனையுமளிக்காது. ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளுடன் இருக்கின்றான்.

அல்குர்ஆன் சூறா அன்பால் - வசனம் 19

*

விசுவாசிகளே! அல்லாஹ்வுடைய பாதையில் (யுத்தம் புரிய நீங்கள் புறப்படுங்கள் என்று உங்களுக்குக் கூறப்பெற்றால், அவ்வாறு புறப்படாமல்) நீங்கள் ஊரில் தங்கி விடுவதன் காரணமென்ன? மறுமையை விட இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டு நீங்கள் திருப்தியடைந்து விட்டீர்களா? மறுமை (யின் வாழ்க்கை) க்கு முன்பாக இவ்வுலக வாழ்வின் இன்பம் வெகு அற்பமானதே!

(உங்களை யுத்தத்திற்கு அழைக்கப்பட்டு) நீங்கள் செல்லாவிடில், உங்களை மிகத் துன்புறுத்தும் வேதனையால் வதை செய்வான். அன்றி, (உங்களைப் போக்கி) உங்கள் இடத்தில் மற்றவர்களை ஏற்படுத்தி விடுவான். (இதற்கு) நீங்கள் அவனுக்கு யாதொரு தீங்கும் இழைக்க முடியாது. (ஏனென்றால்) அல்லாஹ் யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்

அல்குர்ஆன் சூறா- அத்தௌபா 38,39

# அகதி

## அகதி
## இதழ் 7: 1995

தொடர்புகள்:

வடக்கு முஸ்லிம்களின்
உரிமைக்கான அமைப்பு,
15 A, ரோஹினி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு -6.

தொலைபேசி : 586660
பெக்ஸ் : 586660

"AHATHI"

Published by
NORTHERN MUSLIMS'
RIGHTS ORGANIZATION,
15A Rohini Road
Colombo - 6
Sri - Lanka

இச்சஞ்சிகையில் வெளியாகும்
ஆக்கங்களுக்கு அவற்றை
எழுதியவரே பொறுப்புடையவர்கள்

## வடமாகாண முஸ்லிம்களின் இன்றைய உடனடித் தேவை

தற்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக புதிய அரசு ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை எடுத்து வருவதை அவதானிக்கி றோம். அரசுக்கும் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி யுத்தத்தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகி, இன்று யாழ் நகரில் புனருத்தாரண நடிவடிக்கையில் அரசு ஈடுபட முன்வந்துள்ளதையும் காண்கின்றோம்.

இதுவரையில் அரசு புலிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்திற்கு அடிப்படையாக எவ்வித அரசியல் சீர்திருத்தக் கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. அரசு இதற்காக முனைந்த பொழுதிலும் புலிகள் பொருளாதாரத் தடை நீக்கம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற மக்களது அடிப்படைத் தீர்வில்தான் அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகளுக்கு வரமுடியும் என்று அடித்துக் கூறிவிட்டனர். அரசும் இதன் பிரகாரமே பொருளாதாரத் தடையைத் தளர்த்தியும் அத்தியவசிய உணவு மற்றும் மருந்து வகைகளை விரைவாகக் கிடைக்க வழி செய்தும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளில் முக்கிய கவனம் எடுத்து யாழ்ப்பாணத்துக்கு முதலிடம் கொடுத்து ஆரம்பித்துள்ளது.

ஆனாலும் அடுத்தடுத்த கட்டங்களில் இடம் பெறும் பேச்சுவார்த்தைகளில் அரசியல் தீர்வுத்திட்டம் முக்கிய இடத்தைப் பெறும் நிலையில் இருப்பதை அரசியல் அவதானிகள் மறுக்கவில்லை.

இந்நிலையில் வடகிழக்கில் வாழும் சிறுபான்மைச் சமூகங்களின் நிலை கவனத்தில் எடுக்கப்படுமா?

வடகிழக்கு இணைந்த, அடிப்படை யிலான ஓர் சுயாட்சித் தீர்வுத் திட்டத்தையே புலிகள் தற்போது கோரி நிற்பதாக அவர்களின் தலைவர் களின் பேட்டி களிலிருந்து நாம் அறிகிறோம். அரசு இதற்குத் தீர்வாக சமஷ்டி அமைப்பொன்றை அறிமுகப்படுத்த விரும்புவதாகவும் அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் அரசியல் பேச்சு வார்த்தை யொன்று இடம்பெறும் பட்சத்தில் வடகிழக்குச் சிறுபான்மைச் சமூகமாகிய முஸ்லிம்களின் அரசியல் மற்றும் உண்டான சகல உரிமைகளும் தரப்பட்டு ஒரு சுயகௌரவமான சமுதாயமாக தலை நிமிர்ந்து வாழ்வதற்கு எம்மால் முடியுமா?

இவ்வாறான கேள்விகள் எம்முன் எழும்பும் போது எமது மக்களில் பெரும்பான்மையானோர் எமக்காகக் குரல் கொடுப்பதற்கும் எமது உரிமையை வென்றெடுத்துத் தருவதற்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கிறது என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கடந்தகால வரலாறுகளை நாம் புரட்டும் போது அங்கு அரசியல் சந்தர்ப்பவாதம் தாராளமாகக் காணப் பட்டதை மறந்து விட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது இனப்பிரச்சினைகளுக்கு தீர்வாக வடகிழக்கு தற்காலிக இணைப்பும் மாகாண சபையும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த ஒப்பந்தத்தின் போது முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு ஏதாவதொரு தீர்வு இருந்ததா? என்று கூட ஆராயாமல் ஏலவே முஸ்லிம் மாகாணசபையை தனது கோரிக்கையாக முன்வைத்துக் கொண்டு வந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனைக் கைவிட்டு மாகாணசபைத் தேர்தலில் குதித்து 17 ஆசனங்களை வடகிழக்கு மாகாண சபையில் பெற்றதையும் பின்பு குறிப்பிட்ட காலம் சுருட்ட வேண்டியதை சுருட்டிக் கொண்டு அதனை விட்டு வெளியேறியதையும் வரலாறு குறித்து வைத்துள்ளது. இந்த விடயம் எதனைச் சுட்டிக்காட்டுகின்றதெனில் வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியலில் அதற்கு நிலையான ஓர் கோட்பாடு இல்லை என்பதைத்தான்.

1994 பாராளுமன்றத் தேர்தல்களின் போது அஷ்ரப் - சந்திரிக்கா ஒப்பந்தம் வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒப்பந்தமாகப் பிரபல்யப்படுத்தப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால் இவ் ஒப்பந்தம் பற்றி வெளிவிவகார அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு பேட்டியில் "அஷ்ரப் - சந்திரிக்கா ஒப்பந்தம் ஒரு தேர்தல் கூட்டு உடன்படிக்கை மட்டுமே தவிர அது முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு ஒப்பந்தமல்ல" என்று கூறியுள்ளதை சிந்திக்கும் பொழுது சி.ல. முஸ்லிம் காங்கிரஸின் மீது பெரும் ஏமாற்றமே ஏற்படுகின்றது.

இது மாத்திரமல்ல சி.ல. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அண்மையில் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "இந்தப்பேச்சு வார்த்தையில் முஸ்லிம் காங்கிரஸுக்குத் தீர்வு இதுதான் என்று கூற முடியாது. மற்றையவர்கள் முன்வைக்கும் தீர்வுகளை அலசி ஆராய்ந்து முஸ்லிம்களை பாதிக்காத வகையில் இத்தீர்வுகளை வழிநடத்துதல் தீர்வுக்கான சிந்தனையை நெறிப் படுத்துதல் என்பனதான் முஸ்லிம் காங்கிரஸின் பங்காகும்" எனக் கூறியுள்ளார். இதுவும் எமக்கு எதை எடுத்துக்காட்டுகின்றதெனில் முஸ்லிம் காங்கிரஸிடம் நிலையான ஓர் தீர்வுத் திட்டம் இல்லை என்பதையே.

"தற்போது இடம்பெற்று வரும் பேச்சு வார்த்தையில் ஏன் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லை"? என அரசியல் விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஜீ.எல். பீரிஸிடம் வினவப்பட்டபோது "தகுதியான முஸ்லிம் ஒருவர் இல்லை" என்று கூறியுள்ளதையிட்டு சிந்திக்கும் பொழுது இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு சி.ல. முஸ்லிம் காங்கிரஸ் அக்கறை எடுத்துள்ளதா? அல்லது பேராசிரியர் பீரிஸ் போன்றவர்கள் இவர்களைத் தகுதியானவர்களாக மதிக்கவில்லையா? என்ற சந்தேகமும் எழுவது தவிர்க்க முடியாததாகும்.

இவைகள் ஏன் சுட்டிக் காட்டப்படுகின்ற தெனின் சி.ல. முஸ்லிம் காங்கிரஸை சந்திக்கு இழுப்பதற்கல்ல. மாறாக அக்கட்சியை நாம் தொடர்ந்து நம்பிக் கொண்டிருக்க முடியுமா? என்பதை உணர்த்துவதற்காகவே

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் இன்றைய செய்தித்தாள்களினை ஆதாரமாகக் கொண்டு நோக்குகையில் பல வேலைத் திட்டங்களை சி.ல. முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்துச் செல்வதையும் அதே நேரத்தில் அஷ்ரப்-சந்திரிக்கா ஒப்பந்தத்தில் அகதிகளின் விடயம் சம்பந்மாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது மாத்திரமல்ல. அகதிகளுக்காகவே ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று கூறி அகதிகளின் வாக்குகளுக்குப் பொறியும் வைத்தது அந்த ஒப்பந்தம். எனினும் இதுவரையிலும் வடமாகாண முஸ்லிம் அகதிகள் விடயமாக சி.ல. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபினால் தரப்பட்ட வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது என்பது நம்மனைவருக்கும் நன்கு தெரியும்.

இத்துடன் இன்னொரு விடயத்தையும் இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும். அதாவது இப்பந்தி எழுதும் வரையான இறுதி அறிக்கைகளின் படி சி.ல முஸ்லிம் காங்கிரஸ், அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக் கான தனது தீர்வும் திட்டத்தை ஏற்கனவே தான் முன்வைத்த அஷ்ரப்- தொண்டமான் கூட்டு ஒப்பந்தப்படியே முன்வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. அத்தீர்வுத் திட்டத்தில் தமிழர் களுக்கும் முஸ்லிம்களுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்படாததும், தமிழர்களுக்கு மாநில சபையும், முஸ்லிம்களுக்கு மாநில சபைக்கு உட்பட்ட பிராந்திய சபையும் தந்து நாம் குறைக்கப்பட்டதையும் நாம் அறிவோம். அது மாத்திரமல்ல இதே முஸ்லிம் பிராந்திய சபை அதிகாரப் பரப்பெல்லைக்குள் வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

எனவே நாம் எமது அரசியல் மற்றும் உண்டான அனைத்து விடுதலைக்கான போராட்டத்தை எமது சொந்தக்காலில் நின்று ஐக்கியப்பட்டவர்களாய் முன்னெடுத்துச் செல்வது ஒன்றே தற்பொழுது இருக்கும் இறுதியான ஒரே வழியாகும்.

பொதுவாகவே இந்நாட்டில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் சமூகம் பல கூறுகளாகப் பிரிந்து செயல்படுவதானது அதன் ஆரோக்கியத்துக்கு மிகக் கேடாகவே அமையும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

எனினும் அனைத்து முஸ்லிம்களையும் ஒன்றிணைத்து கலிமாவையும் அல்குர்ஆனையும் ஹதீஸையும் வைத்து இஸ்லாமிய சாயம் பூசி ஏமாற்றாத சீரிய இஸ்லாமியத் தலைமைத்துவம் உருவாகும் வரையில் இவ்வாறான நிகழ்வுகள் தவிர்க்க இயலாத ஒன்றாகவே தொடர்ந்து கொண்டிருக்கும்.

ஆக இன்று வடமாகாண முஸ்லிம்கள் இச்சந்தர்ப்பத்திலாவது விழிக்காமல் தொடர்ந்தும் தூங்கிக் கொண்டிருப்பார்களேயாயின் அவர்களது எதிர்கால வாழ்வு காரிருள் சூழ்ந்ததாக அமைந்து விடும் என்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை.

ஆகவே, இந்நிமிடமே நாம் எமது எதிர்கால வாழ்க்கையை ஒளிமயமாக்கத் தயாராக வேண்டும். எமக்கிடையேயுள்ள சகல விதமான வேறுபாடு களையும் மறந்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து புனித இஸ்லாம் கூறும் வழியில் நாம் ஒன்றுபட வேண்டியது இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.

தற்சமயம் அரசியல் யாப்பில் சீர்திருத்தம் செய்வதற்கு ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் அரசு புலிகள் பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வுத்திட்டம் பற்றி பேசப்படவுமுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்று கடந்த கால சம்பவங்களையும் கருத்திற் கொண்டு எமது தீர்வுத் திட்டத்தை நாம் ஒன்று பட்டவர்களாக முன்வைக்கவும் அது உறுதிப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட தொடர்ந்தும் சளைக்காமல் போராடவும் தயாராக வேண்டும்.

# எண்ணக் குமுறல்கள்

அதிர்ஷ்டவசமாக 'அகதி' இதழ் என்கரம் கிடைத்தது. 'அகதி' என்ற சஞ்சிகைக்கான பெயர் என்னால் ஜீரணிக்க முடியாதது. சொந்த மண்ணில் இருந்தும் விரட்டப்பட்டு, ஒரே நாட்டிற்குள் வாழ்கின்றோம். ஈழத்தை விட்டு வெளியேறியவர்கள் கூட தங்களை **"புலம் பெயர்ந்தோர்"** என்று கௌரவமாக அடையாளமிட்டுக் கொள்கின்றனர். எனினும் அடக்கி, ஒடுக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு, உடமைகள் கவரப்பட்டு, உருக்குலைந்து வாழும் மக்களின் ஏக குரலாக ஒலிப்பது சந்தோஷமான செய்திதான்.

ஒட்டமாவடி அறபாத்

***

அகதி இதழ் 5ல் எஸ்.எம்.எம். நபீஸ் என்பவரால் எழுதப்பட்ட "முஸ்லிம்களைத் தனித்துவமான சமூகமாக மதிக்கத்தவறிய தமிழ்ப் போராளிகள்" என்ற கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. இவ்வாறான கட்டுரைகள் இச்சஞ்சிகையில் இடம் பெறுவதை நாம் வரவேற்கின்றோம். இன்னும் தமிழ்ப்போராளிகளை, நம்பும் எம்மவர்கள் வரலாற்று உண்மைகளை அறிந்து, அவர்களை இனம் கண்டு கொள்வதற்கு இவ்வாறான வரலாற்றுக் கட்டுரைகள் உதவும். இக்கட்டுரை என் கண்களை குளமாக்கி கண்ணீரைச் சொரிய வைத்தது.

M.T.M. மனாஸ்
உடையார் வீதி
புத்தளம்.

***

வடக்கு முஸ்லிம்களின் உரிமையைக் கோருவதற்காக இளைஞர்கள் ஒன்று சேர்வார்களா? எனக் கேள்விக்குறியுடன் இருந்தேன். 'அகதி' தான் ஒன்று சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. "அகதி" உரிமைகளை மீட்டெடுப்பதற்காக அரும்பாடுபடுகின்றது என்பதனை, குறிப்பாக நான்காம் வருடச்சிறப்பிதழ் தெளிவாக எடுத்துக் காட்டியது. இவ் 'அகதி' இதழுக்காக உழைக்கும் சகல சகோதரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

M.R முஹம்மது றஸீன்
ஜாமிஆ நளீமிய்யா
பேருவளை.

***

அகதிகளாலேயே நடத்தப்படும் "அகதி" எனும் உணர்ச்சி பூர்வமான சஞ்சிகையின் நான்காம் ஆண்டுச் சிறப்பிதழைக் கண்டேன். எமது ஊரில் இது கிடைப்பதில்லை. ஆனாலும் உன்னைத் தேடி வேறூருக்குப் போய் வாங்கிக் கொண்டு வந்தேன்.

பிரிய கவிஞன்
கிருங்கதெனிய
மாவனல்ல.

***

நீ என் கரம் வந்து சேர்ந்ததும் மகிழ்ச்சிக்கு மட்டில்லை. யாழ் மண்ணில் முஸ்லிம் சமூகத்தில் பிறந்த எமக்கு, யாழ் முஸ்லிம் மக்களின் வரலாறு சொல்லித் தந்த உனக்கு நன்றிகள் பல. வடமாகாண முஸ்லிம் அகதி மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பகிரங்கப்படுத்துவது சிறந்தது. "எம்முடைய தாயகமும் வடக்கே" என்ற இலச்சினையுடன் நீ எந்நாளும் வெளிவர எனது வாழ்த்துக்கள்

ஏ.எம். அஸ்மின்
ஜாமிஆ நளீமிய்யா
பேருவளை

***

'அகதி' ஒரு நல்ல டைனமட். உதிரியாகக் குரல் எழுப்புவதிலும் பார்க்க ஒருமித்த குரலிது, பதிவான குரலிது. இதற்கு அரசு, எதிரி, சந்தர்ப்பவாதி யாவரும் பயப்படுகின்றனர். எனவே, இவ்வழியை விடவே வேண்டாம்.

கவிஞர் ஏ. இக்பால்
ரிபாயா மன்சில்
தர்ஹா டவுன்

***

'அகதி' சஞ்சிகையை எனக்கும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ் எனது சோதர முஸ்லிம்களின் தாயக பூமியான வடக்கு மண்ணை மீட்பதில் எமது முயற்சியின் அவசியத்தை தங்களின் வெளியீடான அகதி சஞ்சிகை உணர்த்துகின்றது. இம்முயற்சியில் வாழைச்சேனையில் இருந்து எனது பங்களிப்பைத் தர நான் விரும்புகின்றேன்.

M.A.M ரபீக்
வாழைச்சேனை

***

அகதிகளுக்கு ஒரு ஒளிகாட்டியாக வந்த 'அகதி' இதழைக் கைநீட்டி வரவேற்கின்றேன். அகதிகளின் உண்மை நிலையை உருவம் போல் வெளிப்படுத்துகின்ற 'அகதி' இதழை வெளியிட்டு, அவர்களின் துன்ப, துயரங்களை மறக்கச் செய்கின்ற உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. 'அகதி' இதழின் வளர்ச்சிக்காக முழு உடலையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கின்றேன்.

M. ரிகாஸ்மஸ்ரின்
கொழும்பு 12

***

'அகதி'- நீயும் நானும் அகதி. உன் பேர் போகாத இடமேயில்லை. விடிவு காணத்துடிக்கும் அடைபட்ட உள்ளங்களை துணிவுபெறச் செய்து விட்டாயே நீ! விடிய விடிய வெளிச்சம் வீசும் வெண்ணிலவாய் இருக்கின்றாய்.

நீ நூறாண்டு காலம் நீடூழி வாழ மனமுவந்து வாழ்த்துகிறேன்.

றசூல் புதுவெளி
மன்னார்

***

# வடமாகாண முஸ்லிம் அகதிகளின் இன்றைய நிலை

## பேராதனைப் பல்கலைக்கழக வடமாகாண முஸ்லிம் மாணவர்கள் நடாத்திய ஆய்வு

வடமாகாண முஸ்லிம்களின் அகதி நிலை பற்றியும், அவர்களின் அரசியல் எதிர்காலம் பற்றியும் தெளிவற்ற சிந்தனைகள் காணப்படுகின்றன. இந்நிலை தொடருமானால் இம்மக்களின் எதிர்கால வாழ்க்கையில் பல்வேறு பாதக நிலைகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சூழ்நிலையில், தெளிவான முறையில் வடமாகாண முஸ்லிம் அகதிகளின் பிரச்சினைகளும் அரசியல் அபிலாஷைகளும் வரையறுத்துக் காட்டப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இவைகளைக் கருத்திற் கொண்டு பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வடமாகாணத்தைப்பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் மாணவர்கள் முஸ்லிம் அகதிகளின் இன்றைய நிலையை ஆராய்ந்து அறியும் முயற்சியொன்றை முதற் தடவையாக மேற்கொண்டனர். இதன் முதற்கட்டமாக முஸ்லிம் அகதிகளை கிராம ரீதியாகவும் மாவட்டரீதியாகவும் முகாம் அடிப்படையிலும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஏறக்குறைய 100 பேர்களை (கல்வியிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள்) தேர்ந்தெடுத்து பின்வரும் இரு பிரதான நோக்கங்களை அடையாளப்படுத்தும் வகையில் ஆய்வினை மேற்கொண்டனர்.

(i) அகதி நிலை பற்றிய மதிப்பீடு
(ii) அரசியல் அபிலாஷை பற்றிய மதிப்பீடு

கடந்த நவம்பர் 1994ல் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் 25 பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டனர். ஆய்வு முறை பற்றிய வழிகாட்டிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வழங்கப்பட்டன. இவ்வாய்வு தெளிவான வினாக்கொத்து ஒன்றின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### (I) அகதி நிலை பற்றிய மதிப்பீடு:-

அகதி நிலை பற்றிய மதிப்பீடு பின்வரும் தலையங்கங்களில் செய்யப்பட்டது.

(அ) உணவு நிவாரணம் தொடர்பான பிரச்சினைகள்.
(ஆ) உடை நிவாரணம் தொடர்பான பிரச்சினைகள்.
(இ) குடியிருக்கும் குடிசைகளின் நிலை
(ஈ) தொழில்வாய்ப்புப் பிரச்சினைகள்.
(உ) கல்விப்பிரச்சினைகள்
(ஊ) முகாம் சூழல் பிரச்சினைகள்
(எ) அரச ஊழியர்களின் பிரச்சினைகள்.

ஆய்வின் வெளிப்பாடுகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

### (அ) உணவு நிவாரணம் தொடர்பான பிரச்சினைகள்.

இன்று வழங்கப்படும் அகதி நிவாரணமானது பற்றாக்குறையுடையது என்றும், வழங்கப்படும் நிவாரணத்தில் அத்தியவசிய உணவுப் பொருட்கள் குறிப்பாக குழந்தைகளுக்கான பால்மா போன்றன வழங்கப்படுவதில்லை எனவும் இதனால் பிள்ளைகள் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுவதாகவும் அறிய முடிந்தது. இதற்குச் சான்றாக ஆரோக்கியமின்மையால் குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் நோய்களும் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டன. அத்தோடு குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளாது நிவாரணம் வழங்கப்படுவதால் அதிக அங்கத்தவர்களைக் கொண்டுள்ள பெரிய குடும்பங்கள் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

### (ஆ) ஆடை நிவாரணம் தொடர்பான பிரச்சினைகள்:

அகதிகள் நிவாரணத்தில் ஆடைகள் உள்ளடக்கப்படவில்லை. தமது ஆடைத் தேவைகளை அகதிகள் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் பூர்த்தி செய்து வருகின்றனர். பாடசாலையில் வழங்கப்படும் சீருடை மாணவர்களின் தேவையை ஓரளவு நிவர்த்தி செய்தாலும் அவர்கள் வீட்டில் அணிந்து கொள்வதற்கான உடைகள், முதியோர், பெண்கள், போன்றோர்களுக்கான ஆடை களைப் பெற்றுக் கொள்வது மிகுந்த சிரமமாக இருக்கின்றது என அறியப்பட்டது. மனித அத்தியவசிய தேவைகளில் ஒன்றான உடைகள் தொடர்புபட்ட பாரிய பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அதிகமான அகதி மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

### (இ) குடியிருக்கும் குடிசைகளின் நிலை:

கடந்த நான்கு வருட காலமாக அகதிகளின் குடிசைகளில் புனருத்தாரண முயற்சிகள் செய்யப்படாமையை அகதி முகாம்களில் பரவலாக அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது. இது தொடர்புபட்ட பிரச்சினைகளாக குடிசையினுள் இட நெருக்கடி, மழை நீர் ஒழுக்குகள், உறுதியற்ற மரந்தடி (பக்க) அமைப்புகள் என்பன அதிக அசௌகரியத்தினை ஏற்படுத்துவதாக அகதிகள் தெரிவித்திருக்கிறார்கள். அகதி முகாம்கள் அமைந்துள்ள சில பிரதேசங்கள் சிறு மழை பெய்தாலும் நீர் வடிந்து செல்ல முடியாத தன்மையைக் கொண்டுள்ளன. குறிப்பாக முந்தல் பிரதேசத்தில் அமைந்துள்ள விருதோடை, கடையா மோட்டை, புழுதிவயல், கனமூலை போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். இதனைத் தவிர்ப்பதற்கு குடிசை அமைப்பு முறையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று பரவலாகத் தெரிவிக்கப் பட்டது.

### (ஈ) தொழில்வாய்ப்புப் பிரச்சினைகள்:

அகதிகள் வாழுகின்ற பிரதேசங்களில் தொழில் வாய்ப்புப் பிரச்சினை காணப் படுவதை இவ்வாய்வு தெளிவுபடுத்து கின்றது. கிடைக்கப்பெறும் சிறிய அளவிலான பயிர்ச்செய்கை, கூலித் தொழில்கள், போன்றவற்றை செய்வதில் கடும் போட்டி நிலவுவதாகவும் இதனால் தொழில் ஒன்றைத் தேடிக் கொள்வதில் பல சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவித்தார்கள். அதிகளவு தொழிலாளர்கள் நிரம்பிக் காணப்படுவதால் குறைந்த அளவான கூலியே வழங்கப்படுவ தாகவும் மக்கள் தெரிவித்தார்கள். இது தொடர்பான பிரச்சினைகளைத் தெளிவாக அடையாளப்படுத்த முடியும்.

1. வேலைக்கு ஏற்ற கூலி வழங்கப்படாத நிலை
2. சிறார்கள் குறைந்த கூலியில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அவர்களது கல்வி முற்றாகப் பாதிக்கப்படுகிறது.
3. உள்ளூர்த்தொழிலாளர்களோடு தொழில் பிணக்குகள் அதிகரித்தமை இதற்கு எடுத்துக்காட்டாக புத்தளம்,

கற்பிட்டி பிரதேச மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### (உ) கல்விப் பிரச்சினைகள்:

கல்வி பற்றி இதற்கு முன்னர் செய்த ஆய்வுகள் பின்வரும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி இருந்தன. அவையாவன

1. குறைந்த நேரத்தைக் கொண்ட மாலை நேரப்பாடசாலை (3 மணித்தியாலம்)
2. கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை
3. உயர்கல்வி பெறும் வாய்ப்பின்மை.
4. பாடசாலை இட நெருக்கடி
5. கல்விக்குப் பொருத்தமற்ற முகாம் சூழல்.

மேற்குறித்த பிரச்சினைகள் இன்று வரை தீர்க்கப்படாது தொடர்ந்து காணப் படுவதை இவ்வாய்வு சுட்டிக் காட்டுவதோடு பல புதிய பிரச்சினைகள் அண்மைக்காலத்தில் உருவாகி இருப்பது பற்றியும் அறியத் தருகின்றது.

இன்றைய நிலையில் சீருடைகள், புத்தகங்கள் என்பன இலவசமாக வழங்கப்பட்டாலும் அவற்றினைப் பயன் படுத்தி கல்வி கற்பதற்கான பாடசாலை நேரம் இன்று அனேகமான இடங்களில் பொருத்தமில்லாது காணப்படுகின்றது. குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் நடை பெற்று வரும் 3 மணித்தியால மாலை நேரப்பாடசாலைகள் ஆரம்பக் கல்வித் துறையில் அதிக பிரச்சினைகளைத் தோற்று வித்திருப்பதோடு மாணவர்களின் கல்வித் திறனைப் பெரிதும் பாதித்துள்ளது.

மேலும், மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியை முகாம்களை அடுத்துள்ள பாடசாலைகளில் மேற்கொண்டு க.பொ.த. (சா/த) பரீட்சை சித்தியடைந்ததைத் தொடர்ந்து க.பொ.த (உ/த) கல்வியினைப் பெறுவதில் பல்வேறு இடையூறுகளை எதிர் கொள்கின்றார்கள். அது மட்டுமன்றி பல திறமை வாய்ந்த மாணவர்கள் கணித, விஞ்ஞானத் துறைகளில் பயில்வதற்கான வசதிகள் அருமையாகவே காணப்படுவதை இவ்வாய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர். இவ்வகையில் வளங்கள் நிறைந்த உயர் பாடசாலைகளின் அனுமதி கிடைக்காமை, தங்கி நின்று கல்வி கற்பதற்கான பண வசதியின்மை, போக்குவரத்து செலவினைத் தாங்குவதற்கு முடியாமை போன்றன சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இதற்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்று கொண்டு வரப்படுவதன் முக்கியத்துவம் பரவலாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

### (ஊ) முகாம் சூழல் பிரச்சினைகள்:

அகதி முகாம்கள் மறுசீரமைக்கப் படாமையினால் முகாம்கள் அமைந்திருக்கின்ற இடங்கள் வாழ்வதற்கு பொருத்தமற்ற சூழலில் காணப்படுவதாக அகதி மக்களின் பிரச்சினைகளைப் பரவலாக அறிந்தவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இதனை இவ்வாய்விலும் அவதானிக்க முடிந்தது. குறிப்பாக அழுக்குத் தொட்டிகளை அகற்றுவதில் உள்ள பிரச்சினைகள் பழைமை அடைந்துள்ள மலசலகூடங்கள் சுகாதார சீர்கேடுகளை தோற்றுவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அத்தோடு நகர்ப்புறங் களிலிருந்து அகதிகளின் முகாம் நோக்கிய வருகையும் ஏற்பட்டுள்ள பிரச்சினையை விசாலப்படுத்தியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

### (எ) அரச ஊழியர்களின் பிரச்சினைகள்:

வடமாகாண முஸ்லிம்கள் இடம் பெயர்ந்து இன்று ஏறக்குறைய நான்கு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் அவ்வப்பகுதி களில் இரண்டாம், மூன்றாம் தர ஊழியர் என்ற கண்ணோட்டத்திலேயே நோக்கப் படுகின்றனர். என்று ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டவர்கள் பரவலாகக் கூறியுள்ளார்கள். ஏன்? இந்த நிலைக்கு விடிவு இல்லையா? இப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க முடியாதா? இல்லையென்றால் மேல்

அதிகாரிகளுக்கு இவர்கள் மீது அக்கறை யில்லையா? என்ற கேள்விகள் பரவலாக எழுப்பப்படுகின்றன.

இன்றைய நிலையில் வடக்கு கிழக்குக்கு வெளியே அதிகளவாக சிங்கள மொழி உபயோக நடைமுறை இருப்பதால் சிங்கள மொழி தெரியாத ஊழியர்கள் குறிப்பாக நிருவாகத் துறையுடன் தொடர்புபட்ட ஊழியர்கள் மொழி ரீதியாக அசௌகரி யங்களை எதிர்நோக்குவதும் தெளிவாக புலப்படக் கூடியதாக உள்ளது. "தங்களுக்கு சலுகை வேண்டாம் உரிமையைத் தாருங்கள்" என்று கேட்டால் கூட மறுத்துரைக்கப்படுவ தாக ஏறக்குறைய 45%மானவர்கள் கூறினார்கள்.

மேலும் அரச ஊழியர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. பரீட்சை மேற்பார்வை, தேர்தல் கடமை போன்ற பல்வேறு பொறுப்புகள் வழங்கப்படுவதில் இன்னும் புறக்கணிப்புக்கள் இடம் பெற்று வருவதும் இவ்வாய்வின் மூலம் புலனாகியது. இதற்கு தீர்வு வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகளவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## (II) அரசியல் அபிலாஷைகள் பற்றிய மதிப்பீடு:

அகதிகள் பிரச்சினைகளுடன் ஒப்பிடும் போது அரசியல் எதிர்காலம் பற்றிய நிலைமை மிகவும் தெளிவற்றதாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வுக்குழு முஸ்லிம் அகதிகளின் அரசியல் அபிலாஷை களை அறியும் முதற்கட்ட முயற்சியாக இவ்வாய்வினை மேற்கொண்டது. இது தொடர்பான ஆய்வினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவும் உத்தேசித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசியல் அபிலாஷைகள் பற்றி கேட்கப்பட்ட வினாக்கள் பின்வருமாறு,

(அ) வட மாகாணம் எமது பிறப்புரிமையா?

(ஆ) எப்போது வடக்கிற்கு செல்ல விரும்புகிறீர்கள்?

(இ) அகதிகளின் அரசியல், அபிலாஷை களை அறிந்தவர்கள் யார்?

(ஈ) வடமாகாண முஸ்லிம்களுக்கென்ற பிரத்தியேக தலைமைத்துவம் அவசியமா?

(உ) விழிப்படைய வேண்டியவர்கள் யார்?

### தமிழினம் மெச்சுகின்றது

இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்புச் செய்துள்ளனர். தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு முஸ்லிம் தனவந்தர்கள் தாராளமாக உதவுவது கண்டு தமிழன் என்ற அடிப்படையில் நான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

தமிழகத்திலும் இலங்கையிலும் வாழுகின்ற முஸ்லிம்கள் தமிழ் வளர்ச்சிக்காக ஆற்றுகின்ற பணியை தமிழினம் மெச்சுகின்றது. பழைய இலக்கியங்கள், நவீன இலக்கியம் வரலாறு சமய நூல்கள் என்று எண்ணற்றவை முஸ்லிம்களால் தமிழ் உலகுக்குத் தரப்பட்டும் உள்ளன.

தமிழ் வளர்ச்சிக்காக முஸ்லிம் வள்ளல்கள் சலிப்பின்றி உதவியும் ஒத்துழைப்பும் நல்குவது மேலும் மன நிறைவைத் தருவதாக உள்ளது.

அ.மா. சாமி
ராணி வார இதழ் ஆசிரியர்.

ஆய்வுகளுக்கு உட்படுத்திய மன்னார், வவுனியா, முல்லைத் தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களிடம் இவ்வினாக்கள் கேட்கப் பட்டபோது கிடைக்கப்பெற்ற முடிவுகள் கீழ்வருமாறு அமைந்து காணப்பட்டதை அறிய முடிந்தது.

**(அ) வடமாகாணம் எமது பிறப்புரிமையா?**

இந்த வினா அவர்கள் மத்தியில் கேட்கப்பட்டபோது எல்லோருமே (100% மான வர்கள்) தமது பிறப்புரிமை வடமாகாணம்தான் அதில் எவ்வித சந்தேகமுமில்லை. என உணர்வோடு கூறினர்.

**(ஆ) எப்போது வடக்கிற்குச் செல்ல விரும்புகிறீர்கள்?**

கடந்தகால நிகழ்வுகளையும் கருத்திற் கொண்டு எமது மூதாதையர்கள் வாழ்ந்து வளம் பொருந்திய வடமாகாண மண்ணுக்கு நாமும் சென்று வாழ்வது எமது உரிமை. ஆனால் நாங்கள் வெளியேற்றப்பட்ட பயங்கர வாத சூழ்நிலையில் எவ்வித மாற்றமும் இதுவரை இல்லாமையால் சுமூகமான ஓர் நிலை உருவாகும் வரை நாங்கள் பொறுத் திருக்க வேண்டியுள்ளது. என்பதை மிகப் பெரும்பான்மையான ஆய்வுக்குட்பட்ட கல்வி யாளர்களும் சமூக சேவையாளர்களும் தெரிவித்தார்கள்.

மேற்கூறப்பட்ட சமூக சூழ்நிலையானது பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு ஒன்றினால் ஏற்படுத்தப்பட வேண்டும். அதில் வடமாகாண முஸ்லிம்களின் உரிமைகள் அரசியல் அபிலாஷைகள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தாங்கள் வடக்கிற்கு செல்ல விரும்புகின்றோம் என்பதை தெரிவித்துள்ளார்கள்.

**(இ) அகதிகளின் அரசியல் அபிலாஷை களை அறிந்தவர்கள் யார்?**

கடந்த கால நிகழ்வுகளையும் தற்கால நிகழ்வுகளையும் கருத்திற் கொண்டால் எதிர் காலத்தில் திட்டமிட்ட அடிப்படையிலேயே செயற்பட வேண்டியுள்ளது என்ற கருத்தை அகதிகள் முன்வைத்தார்கள்.

இதுவரை காலமும் எமக்கு எந்த வொரு பொருத்தமான அல்லது சிறப்பான முடிவுகளோ விடிவுகளோ கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் இதுவரை காலமும் எம்மைப்பற்றியும் எமது பிரச்சினைகளைப் பற்றியும் உளப்பூர்வமாக விளங்கிச் செயற்பட்ட தீர்க்கமான அல்லது பொருத் தமான தலைமைத்துவம் கிடைக்கப் பெறாமை யுமாகும் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். இதற்கு ஆதாரமாக கிழக்கின் தலைமைத் துவமோ அல்லது தெற்கின் தலைமைத் துவமோ எமது பிரச்சினைகளையும் தேவை களையும் உணர்ந்தவர்கள் அல்ல என்பதை தெளிவுபடுத்திய அனேகமானோர் மாற்று வழிகளையும் தெளிவாக எடுத்துக் காட்டி னார்கள். எமது வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினையை தனித்துவமான முறையில் முன்னெடுத்து செல்வதற்கு எமது பிரதேசத்தின் கல்விமான்கள் புத்தி ஜீவிகள் நலன் விரும்பிகளாலேயே முடியும். இதற்காக ஓர் தனித்துவமான அமைப்பு ஒன்றை நிறுவுதல் மிகவும் அவசியமான ஒன்றாகும் என்பதை பிரத்தியேக ஆய்வானது சுட்டிக்காட்டுகின்றது.

**(ஈ) வடமாகாண முஸ்லிம்களுக் கென்ற பிரத்தியேக தலைமை அவசியமா?**

கடந்த பல ஆண்டு காலமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் வடமாகாண முஸ்லிம் மக்கள் எந்தவொரு பிரச்சினையையும் சிறப்பான முறையிலும் கௌரவமான முறையிலும் முன்வைத்து வெற்றி பெற்ற வரலாறு உண்டா? என்ற கேள்வியினை எழுப்பிய அவர்கள் அன்று தொட்டு இன்றைய இருள் சூழ்ந்த அகதி நிலைவரை பல்வேறு துறைகளிலும் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றும் இதற்கான காரணம் எமக்கென்று சிறந்த தலைமைத்துவம் இல்லை என்பதேயாகும் என்பதை ஏறக்குறைய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும் பான்மை யானோர் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்த பலவீனத்தை தங்களுக்குச் சாதகமாக சிலர் பயன்படுத்துகின்றனர் வாழ்விட உரிமையை இழந்த நிலையில் இருக்கும் நாம் இனியாவது அரசியல் விழிப்புணர்வு பெறாவிட்டால் எமது எதிர்காலம் மேலும் பயங்கரமானதாகவே அமையும். அகதி மக்களின் அச்சத்தையும் அரசியல் ஆர்வத்தையும், அரசியல் விழிப்புணர்வையும் ஆய்வானது தெளிவுபடுத்துகின்றது. இது பற்றி மக்கள் கூறும் கருத்துக்கள் மிகவும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியதாகும்.

இதுவரை காலமும் ஏமாற்றிய, ஏமாற்றிக் கொண்டிருக்கும் சுய நல சக்திகளுக்கு விடை கொடுத்து விரட்டிவிட வேண்டும். புதியதோர் யுகத்தினை நோக்கி வீறு நடை போட வேண்டும் இதற்கு எமது மக்களில் இருந்து சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்கி அவர்களுக்கூடாகவே பிரச்சினைகள் முன்வைக்கப்படுவது அவசியமாகும். இதுவரை காலமும் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் எங்காவது உளப்பூர்வமாகப் பேசப்பட்டதுண்டா? அதற்கு விடிவு கிடைக்கும் செயற்பாடுகள் ஏதும் நிகழ்ந்ததுண்டா? என்ற வினாக்களைத் தொடுத்து, இவைகள் தான் எங்களினதும் அனைத்து வட மாகாண முஸ்லிம்களினதும் உள்ளத்தை உருக்கும் விடயங்கள் என்பதை தெரிவிக்கும் அகதிகளின் மனநிலையை இவ்வாய்வு இலகுவாய் தெளிவுபடுத்தியுள்ளது.

### (உ) விழிப்படைய வேண்டியவர்கள் யார்?

இன்றைய நிலையில் வடமாகாண முஸ்லிம்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருவோரின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருகின்றது. இதற்கு முடிவு கட்ட வேண்டும். அவ்வாறானவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும். இதற்காக எம்மிடையே இருக்கின்ற புத்தி ஜீவிகள் அனுபவசாலிகள் அனைவரும் விழிப்படைய வேண்டும். எமது சமூகத்தின் நலன்களைக் காக்க வேண்டும் என்றவாறு 95% வீதமானவர்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள் என்பது ஆய்வின் மூலம் புலனாகின்றது.

மேற்குறித்த ஆய்வு வடமாகாண முஸ்லிம்களின் அகதி நிலை, அரசியல் நிலை ஆகிய இரண்டையும் அறிய நடாத்தப்பட்ட முதற்கட்ட நடவடிக்கையாகும். இவ்வாய்வில் வெளிக்கொண்டு வரப்பட்ட உண்மைகள் அகதி முஸ்லிம்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்கு உதவும் என இவ்வாய்வுக்குழு பூரணமாக நம்புகின்றது. அதே நேரத்தில் அகதிகளின் நிலைமையை மேலும் அறியவும் பிரச்சினைகளில் மேலும் தெளிவு பெறவும் அவ்வப்போது ஆய்வுகள் செய்யப்பட வேண்டுமெனவும் இதில் பேராதனைப்பல்கலைக்கழக சமூக மாணவர்கள் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை ஏனைய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வடமாகாண முஸ்லிம் மாணவர்களையும் அன்புடன் வரவேற்கின்றார்கள். அத்தோடு தொடர் ஆய்வுகளுக்கு மேலும் பக்கபலமான உதவிகளை வழங்குமாறு விரிவுரையாளர்களும் கேட்கப்படுகிறார்கள்.

---

**அதி உன்னத சேவை**

மாற்றங்களுக்குள்ளாகி வரும் இலங்கையில் மாறி வரும் ஒரு சமூகத்தில் தோன்றும் சவால்களை எதிர்நோக்கும் ஒருதலை முறையைச் சேர்ந்தவர்களென்ற வகையில் முஸ்லிம்களாகிய நாம் இந்நாட்டிறகாற்றும் அதி உன்னத சேவை எமது சொந்த கலாசாரத்தைத் துறப்பதும், புறக்கணிப்பதுமன்று மாறாக அதைப் பேணிப் பாதுகாத்து வளப்படுத்துவ தேயாகும்.

அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ

# "முஸ்லிம்களை அவர்களது சொந்த இருப்பிடங்களில் குடியமர்த்துவது எங்களுடைய கடமை"

– அன்டன் பாலசிங்கம்–

பிரபல முஸ்லிம் பத்திரிகையாளரும், "ஐலன்ட்" பத்திரிகையின் அரசியல் நிருபருமான ஸக்கி ஜபார், அண்மையில் யாழ்ப்பாணம் சென்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அண்டன் பாலசிங்கத்தைப் பேட்டி கண்டார். நீண்ட பேட்டியில், பிராந்திய சுயாட்சி அலகு உட்பட பல்வேறு விடயங்கள் பற்றிய கேள்விகளுக்கு அண்டன் பாலசிங்கம் பதிலளித்திருந்தார். முஸ்லிம் மக்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளையும் அதற்கான பதில்களையும் இங்கே தருகிறோம்.

"முஸ்லிம்களது பிரச்சினைகளைப் பொறுத்தவரை குறிப்பாக வடக்குக் கிழக்கு வாழ் முஸ்லிம்களது பிரச்சினைகளானது மொத்தமாகவே மையப்பிரச்சினையோடு தொடர்புற்றதாகவே இருக்கின்றது என்றே நாம் கருதுகின்றோம். எனவே முன்வைக்கப்படும் எந்த அரசியல் தீர்வாயினும் முஸ்லிம் மக்களது அரசியல் கலாசாரத் தனித்துவத்தை அங்கீகரிப்பதாகவும் இருக்க வேண்டும். அதேவேளை அவர்கள் தனித்த சுயாட்சி அலகை கோரினாலும் நாங்கள் நிச்சயமாக அதனை(யும்) வரவேற்கவும் தயாராயிருக்கிறோம்" என்று கூறும் பாலசிங்கத்தின் பேட்டியிலிருந்து..........

**கேள்வி: பிராந்திய சுயாட்சி வழங்கப்படுமிடத்து, LTTE அதனது தனி ராஜ்ஜியக் கோரிக்கையைக் கைவிடுமா?**

* பிராந்திய சுயாட்சி முறையானது உலகெங்கிலும் வித்தியாசம் வித்தியாசமான அமைப்புகளிலும், வித்தியாசமான அதிகாரப்பரவலாக்கல் முறைகளுடனும் இருக்கின்றது. தமிழ், முஸ்லிம் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் ஓர் பிராந்திய சுயாட்சி அலகு முன்வைக்கப்படுமானால் அதை நாம் கருத்தில் எடுப்போம்.

**கேள்வி: முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் மீண்டும் வடக்கிற்கு வருவதற்கு புலிகள் அனுமதிப்பார்களா?**

* முஸ்லிம் மக்களை மீண்டும் வடக்கே அழைப்பதே எங்களதும் நோக்கமாகும். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகச்சொற்ப அளவிலேயே இங்கே இருந்தனர். எந்த இனத்து மக்களும் இங்கு வரும் உரித்துடையவர்களே. தமிழ்ப் பிரதேசங்களில் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களையே நாம் எதிர்க்கின்றோம். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், நடந்த விடயங்களையிட்டு நாம் எமது வருத்தத்தை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம் அத்தோடு அவர்களை மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம். இங்குள்ள (தமிழ்) அகதிகள் அவர்களது ஊர்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சென்றதும் முஸ்லிம்கள் மீண்டும் குடியேறலாம்.

**கேள்வி: சிங்கள மக்களின் மீள் வருகை பற்றி....**

* முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் வித்தியாசப்பட்ட இரண்டு இனக்குழுக்கள் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இங்கே இருந்திருக்கின்றார்கள். ஆனால் சிங்கள மக்கள் சிறிய அளவில் சிதறியே வாழ்ந்திருக்கின்றார்கள். எனினும், அவர்களும் வரலாம். அது பற்றி நாம் மறுப்பேதும் தெரிவிக்கப் போவதில்லை.

* வடக்கு எப்போதும் தெற்கிற்காகத் திறந்தே இருக்கும். தொடர்புகளுக்கான வழிகளும் எப்போதும் திறந்தவையே. அப்போதுதான் எல்லா சமூக மக்களும் இங்கே வருவதற்கு இலகுவாக இருக்கும்.

* முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் திட்டவட்டமான பிரச்சினை இருக்கின்றது. அவர்களில் அனேகம் பேர் அகதிகளாக அல்லல்படுகிறார்கள். எனவே அவர்களை அவர்களது இருப்பிடங்களில் குடியமர்த்துவது எங்களுடைய கடமையாக இருந்து கொண்டிருக்கிறது.

# இளைய இரத்தங்களுக்கு.........

நாகரீகத்தில் நாங்கள் முன்னேறி விட்டோம். அதன் உச்சியையும் பிடித்துச் சுவைத்து விட்டோம் என்று நாடுகள், தேசங்களெல்லாம் மார் தட்டிக் கொள்கின்றன. எங்கும் நாகரீகம், நாகரீகம் என்று நாய்களை விடவும் கேவலமாக பகிரங்கமாக அனாச்சாரங்கள் பூமி தனில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. நவீன நாகரீகம் உற்பத்தி செய்து தந்திருக்கும் ஆடம்பரச் சாதனங்களின் மூலமாகவே பல அசிங்கங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு இன்று நற்செயல் என்று கருதிச் செய்யப்படுகின்றன. இவ்வுலக வாழ்வின் முழு இன்பங்களையும் அனுபவித்து விட வேண்டுமென மனிதன் படாதபாடுபட்டு அலைச்சலில் உழன்று திரிகின்றான்.

வாழையடி வாழையாக இளைஞர் குலாம் இப்படிப்பட்ட இழி செயல்களிலேயே மூழ்கிக் கிடக்கின்றது. இது மிக மிக வேதனை தரும் விடயமாகும். எழுச்சியின் வித்துக்களாக மிளிர வேண்டிய இளந்தலை முறையினரின் தற்கால நடவடிக்கைகளை நோக்குகின்ற போது கவலைக்கிடமாகவுள்ளது. சொற்ப இன்பத்திற்காக தங்களையே இழந்து விடுகின்றனர். தாக்கிகளின் கத்திகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் துவண்டு விடுகின்றனர். முடங்கிச் செயலற்ற பிண்டங்களாக உலா வருகின்றனர். வாலிபப் பருவமானது எண்ணை பூசிய தரையிலே, கண்ணாடிப் புட்டிலைக் கொண்டு செல்வது போலஎன்று சொல்வார்கள்.

ஒரு சமூகத்தின் அல்லது நாட்டின் எழுச்சியலை மிகுந்தடிக்கின்றதென்றால் அது இளைஞர்கள் மூலம்தான், வரலாறுஇதற்கான சீருதாரணங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது. அலீ இப்னு அபீதாலிப், ஜஃபர் அத்தய்யார், ஸுபைர், ஸஅது இப்னு அபீவக்காஸ், முஸ்அப்இப்னு உமைர், அப்துல்லாஹ்பின் மஸ்ஊத், அலி (ரழி), இவர்களெல்லாம் இருபது (20) வயதிற்கும் உட்பட்ட காலத்திலேயே சமூக உய்விற்காக, அதனைக் கட்டிக்காக்க வேண்டுமென்பதற்காக பாடுபட்டவர்கள். எமக்கெல்லாம் உதாரண புருஷர்கள் ஆனால் இன்று வாலிபர்கள் (எல்லோருமல்ல) வௌவால் சூரிய ஒளி இருந்தும் பார்க்கும் ஆற்றல் இழந்திருப்பது போலல்லவா சித்தத்தை இழந்து காணப்படுகின்றார்கள்.

இன்று இளைஞர்களைப் பிடித்திருக்கின்ற ஆகப் பெரிய பேய் சினிமா, இஸ்லாம் சொல்கின்ற அத்தனை தீமைகளின் மொத்த உருவமே இந்தச் சினிமாதான், கொலை, கொள்ளை, நாகரிகச்சீர்கேடு முதலிய வற்றையே சினிமா விபரிக்கின்றது. இதனை அனைத்துச் சீர்கேடுகளினதும் ஊற்றுக் கண் என்றே சொல்லலாம். இளைஞர்கள் இதனிடத்தில் நடந்து கொள்கின்ற விதம் மிகவும் ஆபத்திற்குரியது.

ஆம்! சரியான வழிகாட்டுதல் இன்மையால் இளைஞர் சமுதாயம் வழி தவறிச்சென்று கொண்டிருக்கின்றது. தெரியாத ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டுமென்ற கிறுக்கு உணர்ச்சியின் கிளர்ச்சி சில வேளை அதாள பாதாளத்திற்கு இட்டுச் சென்று விடுமென்பதை இளைஞர்கள் உணர வேண்டும். குறுக்கு வழியும் பேராசையும் வெற்றியளிப்பதில்லை. சந்தர்ப்பம் மாற அது நஞ்சாகி விடுமென்பதை உணரத் தலைப்பட வேண்டும். இளம் இரத்தம் செய்கின்ற செயல்களின் நலவு எப்பேர்ப்பட்டதெனினும் அதன் எதிர்விளைவு

களையும் ஒப்பு நோக்கிச் செயற்பட வேண்டும் ஏனெனில் சமூகத்தில் நஞ்சு கலக்கப்பட்ட இனிப்புப் பண்டங்களே மலிந்து கிடக்கின்றன.

இளைஞர்கள் தன்னம்பிக்கையையும் முயற்சியையும் ஒரு போதும் விட்டு விடக்கூடாது. இவையிரண்டும் இருந்து விட்டால் எதனையும் சாதிக்க முடியும். வினைகளைக் கையாண்டு கொண்டே இருக்க வேண்டும். தோல்வி நேரிடலாம். துவண்டு போய் விடக்கூடாது. நிச்சயம் விரைவில் பயன் கிடைத்தே தீரும். நலன் பெறுவதும் பெறாததும் இறைவனின் நாட்டத்தைப் பொறுத்தது.

இளைஞர்களே! எமது சமுதாயம் பாரிய ரணங்களுக்கு உட்பட்டுவிட்டது. உட்பட்டுக் கொண்டுமிருக்கிறது. பாரிய தேக்க நிலையுடன் கூடிய செயலற்ற தன்மையே இதற்கெல்லாம் காரணமாகும். இன்றைய நிலைமையில் சிந்திக்கப்பட வேண்டியது, தேக்கநிலை உயிரினை ஆட்கொண்டு விடுகின்றது. பிறகு வாழ்க்கை முழுவதும் தேக்க நிலைக்காளாகின்றது. பின் படிப்படியாக அது ஆபாசங்களின் குறுகிய வட்டத்துள் நின்று செயற்பட வைக்கின்றது.

சோதனைகளின் சம்மட்டியடிக்கும், அனுபவங்களின் கடுமைக்கும், துன்பங்களின் கொடூரத்திற்கும் உட்பட்டு விட்ட எம் சமுதாய உயர்ச்சிக்காக இளைஞர்களே பணியாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகும். உணர்ந்து செயற்படுவது இளைஞர்களின் கரங்களிலேயே தங்கியிருக்கின்றது. இளைஞர்களே! இதனைப் புரிந்து சமூக எழுச்சிக்கு தொண்டாற்ற முனைவீர்களாக!

டீ.எம்.அமானுல்லாஹ்
கிண்ணியா

## தலைமைத்துவப் போராட்டம் சமூகத்தை பலவீனமடையச் செய்யும்

சிறுபான்மை சமூகத்தினர் பெரும் நெருக்கடியான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். சிறுபான்மை இனத்தின் ஒரு பிரிவான முஸ்லிம்களாகிய நாம் பயன் தர முடியாத விடயங்களிலெல்லாம் தலையிட்டு விதண்டாவாதம் செய்து கொண்டிருக்கின்றோம். எமது அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்க்கமான முடிவெடுக்க முஸ்லிம் சமுதாயம் இன்று பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது பெரும் கவலை தரக்கூடிய விடயமாகும்.

தெற்கை எடுத்துக் கொண்டால் இங்கும் முஸ்லிம்கள் சிறுபான்மையினர். வட கிழக்கை எடுத்துக் கொண்டால் அங்கும் எமது சமூகம் சிறுபான்மையினர்தான். இப்படியான சூழ்நிலையில் எமது உரிமைகளை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைச் சரியான முறையில் ஆராய்ந்து முடிவெடுக்க முடியாத நிலையில் முஸ்லிம்கள் உள்ளனர்.

முஸ்லிம்களாகிய நாம் இந்த நாட்டில் மிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச்செய்கை எமது சமூகத்தை தொடர்ந்தும் பலவீனமடையச் செய்யும் என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

முஸ்லிம்கள் மத்தியில் இன்று தலைவர்கள் கூடி விட்டனர். ஆனால் அந்தந்த தலைவர்களால் சமூகத்துக்குப் பயன்படுத்தக் கூடிய பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை எவராலும் மறுக்க முடியாது.

டாக்டர் எம்.ஸீ.எம். கலீல்

# அகதி மாணவரின் அவலங்கள் !

எம்.எச்.எம். ஹாரிஸ்

வட பகுதியிலிருந்து "கலிமா" "கல்பில்" கலந்திருந்ததால் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும்.

இதில் மன்னார்ப் பகுதியும் அடங்கும். இங்கே முஸ்லிம்கள் கூடியளவில் எல்லா இடங்களிலும் செறிந்து வாழ்ந்தனர். இதில் குறிப்பிடக் கூடிய சில இடங்களில் விடத்தல்-தீவு என்னும் கிராமமும் பிரதான இடமாகும். விடத்தல் தீவு என்றாலே அறிவாளிகளை நிரம்பப் பெற்ற ஓர் குட்டி ராஜ்யம் எனவும் சில பேர் கூறுவர்.

மன்னார் மாவட்டத்திலேயே படித்தவர்கள் அதிகமுள்ள பிரதான குடியிருப்பு. இது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. என்ஜினியர், டொக்டர் தொடக்கம் வக்கீல் ஆசிரியர் என பெரும் தொகையான உத்தியோக பட்டாளத்தையே கொண்ட சிறப்பிற்குரிய பெருமைக்குரிய ஓர் இடம் விடத்தல் தீவு.

90.10.26 அன்று எவ்வித நியாயமும் இன்றி மன்னார்ப் பகுதி முஸ்லிம்கள் வெளி யேறும்படியான உத்தரவு புலி இயக்கத்தினரால் பிறப்பிக்கப்பட்டது. (வெளியேறிய திகதிகள் வித்தியாசப்படலாம்) விடத்தல் தீவு மக்களும் பல சிரமத்தின் மத்தியில் துன்பங்களையும், துயரங்களையும் சொந்தமாக்கி நான்கு நாள் பயணப்பட்டு கடைசியில் புத்தளம் வந்தடைந்து இலங்கையின் பல பாகங்களிலும் இப்போது வாழ்கின்றனர். ஆனாலும் புத்தள மாவட் டத்திலுள்ள கரம்பை என்னும் இடத்தில் தான் விடத்தல் தீவு மக்கள அதிகமாக வாழ்கின்றனர். சுமார் 250 குடும்பங்கள் வரை இதில் உள்ளனர்.

இதில் சுமார் 300 மாணவ மாணவியர் வரை உள்ளனர். ஆனால் கல்வி கற்போர் தற்போது குறைந்து வருகிறது. இதற்கு பல காரணங்கள் உள.

அறிவுத்தாகமிக்க இவர்களுக்கான பாடசாலை $2\frac{1}{2}$ மைலுக்கு அப்பால் இருக்கும் புழுதிவாசல் முஸ்லிம் மகாவித்தியாலயம் தான். எவ்வித வாகன வசதியுமற்ற இந்தப்பகுதியில் பல மைல் நடந்து சென்றே மாணவர்கள் தம் அறிவுப் பசியைத் தீர்க்கின்றனர். $2\frac{1}{2}$ மைல்கள் நடப்பதென்றால் இலகுவான காரியமா?

ஆறு வயது முடியாத பாலகர்கள் கூட தம் பாதத்தைக் காயமாக்கி கல்வி கற்கின்றனர். நடந்து செல்லும் இளம் மாணவிகள் மீது சில காடையர்கள் தகாத சொற் பிரயோகங்களை உபயோகிக்கின்றனர். சில மாணவிகள் வெட்கத்தால் கூற முடியாமல் தம் பாடசாலை வாழ்வை இடையோடு முடித்துக் கொள்கின்றனர்.

அகதி என்றாலே இரண்டாம் பட்ச நிலைதான் பல பாடசாலைகளில் நிலவுகிறது. கட்டிடத் தட்டுப்பாடு மற்றும் தளபாட, ஆசிரிய தட்டுப்பாடு போன்ற குறைபாடுகளும் உள்ளன. இதற்கு புழுதிவாசல் வித்தியாலயமும் விதிவிலக்கல்ல.

எனவே பிற அகதி மாணவ மாணவியர் எதிர் நோக்காத பல பிரச்சினைகளை எதிர் நோக்கி இருக்கும் கரம்பை அகதிமுகாம் மாணவர்களின் நலன் கருதி இஸ்லாமிய நிறுவனங்கள், பணம் படைத்தோர், கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முயல வேண்டும். இவர்களது சேவையை அம்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# நாம் பயங்கரவாதிகளே ! யாருக்கு ......

எம்மைப்படைத்துப் பரிபக்குவப் படுத்தும் அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்.

**"அவர்களை எதிர்ப்பதற்காக (ஆயுத) பலத்தையும் (திறமையான) போர்க் குதிரைகளையும் உங்களுக்குச் சாத்தியமான அளவு நீங்கள் (எந்நேரமும்) சித்தப்படுத்திவையுங்கள். இதனால் அல்லாஹ்வின் விரோதியையும் உங்களது விரோதியையும் நீங்கள் பயப்படச் செய்யலாம். இவர்களின்றி (விரோதிகளில்) வேறு சிலர் இருக்கின்றனர். அவர்களை நீங்கள் அறியமாட்டீர்கள். அல்லாஹ் தான் அவர்களை அறிவான்" (8-60)**

மேலே கூறப்பட்ட இந்த வசனத்தில் முஸ்லிம்கள் நல்ல பலத்தோடு இருக்க வேண்டுமென்று தெளிவாகக் கூறுவதோடு நிராகரிப்பவர்களுக்கு பயத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்குபவர்களாக முஸ்லிம்கள் இருப்பார்கள் என மிகத் தெளிவாகவே குறிப்பிடுகிறான். அப்படியாயின் உண்மையாகவே நாம்

பயங்கரவாதிகள் (தான்)
தீவிரவாதிகள் (தான்)
அடிப்படைவாதிகள் (தான்)
மதவாதிகள் (தான்)

இவைகள் எப்போது? யாருக்கு?

* எவ்வித ஆதரவும் ஒத்தாசையும் சக்தியும் இன்றி நொந்து, நலிவுற்றிருக்கிறார்களே அவர்களுக்கா!

அல்லாஹ் பாதுகாப்பானாக.

* அல்லது வங்கிகளைக் கொள்ளையிடவும், போதைப்பொருள் வியாபாரத்திலீடுபடவும், கன்னிகளைக் கற்பழிக்கவும், அநியாயங்கள் அட்டூழியங்களை புரியவும், தீய செயல்களை உருவாக்கவுமா?

-அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக

* அல்லது பூரண சுதந்திரத்தோடு நிம்மதியாக தங்கள் நாடுகளில் வாழும் மக்களை வாழவிடாது விரட்டவா?

இல்லை அல்லாஹ் நம்மைப் பாதுகாக்க வேண்டும்.

இல்லை இவை எதற்குமே இல்லை. அப்படியாயின் நமது பயங்கரவாதம் எதற்காக? யாருக்காக?

* எம் அன்புக்குழந்தைகளின் இதழ்களில் தவழ்ந்த புன்னகைகளைக் கொள்ளையிட்டார்களே அவர்களின் பயங்கரவாதிகள் நாம்.

* எம் சகோதரர்களின் இரத்தங்களை ஓட்டினார்களே அவர்களின் பயங்கரவாதிகள் நாம்.

* எங்கள் தாய்மார்களின் உள்ளங்களில் துன்பத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தினார்களே அவர்களின் பயங்கரவாதிகள் நாம்.

* எங்கள் சகோதரிகளை மானபங்கப் படுத்தினார்களே அவர்களின் பயங்கரவாதிகள் நாம்.

* நாங்கள் தான் மனித உரிமைக்காகப் போராடுபவர்கள் அதன் பாதுகாவலர் கள் என்று தம்மட்டமடித்துப் பொய் யுரைத்துத் திரிகிறார்களே அவர்களின் பயங்கரவாதிகள் நாம்.

* எங்களது புனித மார்க்கத்துக்கு தீங்கிழைக்க யார் நினைக்கிறார்களோ அவர்களுக்கு நாம் பயங்கரவாதிகள்

நாம் அடிப்படைவாதிகளும் தான் ஏனெனில் எங்களது மார்க்கத்தின் அடிப்படைகளை உறுதியாகப் பின்பற்றுபவர்கள் நாம்.

நாம் தீவிரவாதிகளும் தான்.. எமது புனித "தீனை"யும் முஸ்லிம் "உம்மா"வையும் யார் நையாண்டி செய்து கேவலப்படுத்துகிறார் களோ அவர்களுக்கு நாம் தீவிரவாதிகளே.

நாம் மதவாதிகளும் தான்........ எமது கண்ணியத்தைக் கெடுக்க நினைக்கும் ஒவ்வொரு நிராகரிப்பாளருக்கும் நாம் மதவாதிகளே.

மிகப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், ..............

உலக செய்தி ஸ்தாபனங்கள் அனைத்தும் இரவும் பகலும் இவ்வார்த்தைகளைக் (பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், அடிப் படைவாதிகள், மதவாதிகள்) கூறி எமது நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கெடுத்துவிடலாம், அல்லது குறைத்து விடலாம் என நினைக்கின்றன. இவர்களின் இந்த சூழ்ச்சிகளை தோலுரித்துக் காட்டவே எங்களது புனித மார்க்கம் இச்சொற் பிரயோகங்களை ஏற்கனவே எமக்கு அறிமுகம் செய்து விட்டது.

என் இஸ்லாமிய உடன் பிறப்புக்களே!

* நாமும் தடுத்துக் கொண்டிருக்க மேற்கத்தேயவாதிகளும் நிராகரிப் பாளர்களும் எதுவரை எம்மைத் தாக்கிக் கொண்டிருப்பர்?

* நாம் அழுது கொண்டிருக்க எதுவரை அவர்கள் சிரித்துக் கொண்டிருப்பர்?

* நாம் தூங்கிக் கொண்டிருக்க எதுவரை அவர்கள் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பர்?

* எதுவரை............ எதுவரை.........

முஸ்லிம்களே! இந்த ஆழ்ந்த உறக்கத்தி லிருந்து எப்போது நாம் கண் விழிப்போம்?

தூங்கியது போதும் கண் திறவுங்கள். வெள்ளம் வருமுன் அணை போடுங்கள்.

அரபு மூலம்:- பவ்லா பஹாவுத்தீன் (அல்ஜிஹாத் டிசம்பர் 94)

– இஸ்லாமியப் பல்கலைக்கழகம், சூடான்

தமிழ் வடிவம்: அபூபஹீமா

உரோமபுரியுடனோ அறேபியருடனோ
இணைக்கப்பட்டவர் அல்லர் நாம்
குறிப்பிட்டதொரு விகிதாசாரத்துக்குக்
கட்டுப்பட்டவர் அல்லர் நாம்.
'ஹிஜாஸி'லிருந்த அன்புக்குரியோரின்
கருணைமிகு காதல் வயப்பட்டோர் நாம்!
அதனாலேயே தான் நாம் எந்நாளும்
இருவரோபொருவர் இணைந்தேயுள்ளோம்.

அல்லாமா இக்பால்

# அகதி நண்பனின் பதில் மடல்

அன்பின் நண்பன் இஸ்மாயில் ஸலபிக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு

நான் நலம். உன்மடல் கண்டு நலமறிந்தேன். "அகதி நன்பனுக்கு ஒருமடல்" எனத் தலைப்பிட்டு, அகதி இதழ் 6 இன் மூலம் நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. அம்மடலின் இறுதியில் "உன்மடல்கண்டு தொடர்வேன்" என எழுதியிருந்தாய். எனவேதான் பதில் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

நான் ஊரில் இருந்த வேளை என்னிடம் குடிகொண்டிருந்த இஸ்லாமிய வாழ்க்கை நெறி பற்றி எடுத்துக்கூறி, அகதி வாழ்வில் எங்கு சென்றது என வினவியிருந்தாய். ஒரு நண்பனின் கடமை அது. செய்திருக்கிறாய் நன்றி நண்பனே.

இந்த அகதி வாழ்க்கைக்கே காரணம் அந்த இஸ்லாம்தானே. ஏன் தெரியுமா? அந்த இஸ்லாமிய உணர்வும், அறிவும் என்னிடம் இருந்ததால்தான் என் உடமைகளைப் பறிகொடுத்து பெருமானாரின் பாதையில் புறப்பட்டு வந்தேன். இல்லையெனில் என் கழுத்தில் சிலுவையைத் தொங்க விட்டு அல்லது எமது பள்ளிவாயில்களைக் கோவில்களாக மாற்றி, நானும் மாறி வடக்கை விட்டு வெளியேறாது இருந்திருப்பேன்.

அகதிகள் நாம் மக்கத்து முஹாஜிர்கள் அல்ல. அவர்களின் வாரிசுகள் என்றுதான் கூறுகின்றோம்.. நாம் வரலாறு படைத்தவர்களல்ல. ஆனால் வரலாற்றில் பதியப்பட்டோம். நாங்கள் இழிச்சவாயர்கள் அல்ல. இழிவுபடுத்தப்பட்டோம். நாங்கள் வந்தேறு குடிகள் அல்ல. இம்மண்ணுக்குச் சொந்தக்காரர்கள். வடக்கின் வாரிசுகள்.

இன்று நாம் தேடுவது மதீனத்து அன்சாரீகளை உன்னைப்போல் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எங்கே நண்பனே! எம்மைத் தட்டி எழுப்பி ஆர்வமுட்ட உயர்த்திய உன் பேனா வாளை அவர்கள் பக்கமும் வீசு. எம்மைவிட அதிகமாகத் தூங்குபவர்கள் அவர்களும் தான்.

மக்கத்து முஹாஜிரீன்களுக்கு மதீனத்து அன்ஸாரிகள் கொடுத்த ஆதரவு பற்றி பக்கம் பக்கமாய் எழுது. முஹாஜிர்களின் வெற்றிக்கு அன்ஸாரின்களின் பங்களிப்பு என்ன என்பதை எடுத்து ஓது.

பின்னர் நீ ஓதியதும், எழுதியதும் பயனளித்து விட்டால் அவர்களோடு சேர்ந்து நீயும், புறப்பட்டு வந்து முகாம்களை வட்டமிடு. அப்போது நாங்களும் தயாராவோம். எம் தாயகம் காண்பதற்கும், இழந்த எம் இஸ்லாமிய அறிவையும், உணர்வையும் பண்பாட்டையும், கலாசாரத்தையும் பெறுவதற்கும் முஸ்லிம்கள் நாங்கள் என்று முழக்கமிடுவதற்கும்,

செய்வாயா நண்பனே! முயற்சித்துப்பார்

இப்படிக்கு
அகதி நண்பன்
செய்னுதீன் எஸ்.பரீத்
அகத்தி முறிப்பு

# என்ன விலை கொடுத்தாவது நாம் ஒன்றுபடுவோம் !

## தப்லீக் தலைவரின் இறுதிப் பேருரை

**(மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்களுக்குப் பிறகு மௌலானா முஹம்மது யூசுப் அவர்கள் தப்லீக் இயக்கத்திற்கு தலைமை ஏற்றார். கடுமையாக உழைத்து, அந்த இயக்கத்தைப் பரவலாக்கினார். 30.3.65 இல் பாகிஸ்தானில் உள்ள ராவல்பிண்டியில் தப்லீக் மாநாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கே அவர் காலமானார். மரணமாவதற்கு சில மணி நேரம் முன்பு அவர் இறுதிப் பேருரை ஆற்றினார். காலம் சென்ற மௌலானா அவர்களின் இந்த இறுதி உரை பல அறிவுரைகளைக் கொண்டுள்ளது. அது இன்றும் நாம் கவனித்துப் பேண வேண்டிய ஒன்றாகும்)**

என் உடல்நிலை சரியில்லை. நான் இரவு முழுவதும் தூங்கவில்லை. ஆயினும், நான் உங்களிடம் உரையாற்றுவது அவசியம் எனக் கருதுகிறேன். கேளுங்கள்! எவர் இறைவனுக்குரிய நாட்டத்தை செவி சாய்த்து நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்கள் வெகுமதி பெறுவார்கள். எவர்கள் அவ்வாறு செயல் படுவதில்லையோ அவர்கள் கஷ்டப்படுவார்கள். தங்கள் தீய செயலுக்கான விளைவை அனுபவிப்பார்கள்.

அண்ணலார் அவர்களும் அவர்களுடைய அன்புத் தோழர்களும் இறை நம்பிக்கையாளர் களின் ஒரு சமுதாயத்தை (மிகவும் கடினமாக உழைத்து) உருவாக்கினார்கள். பிற்காலங்களில் விரோதிகள் அந்தச் சமூகத்தை சிதறியடிக்கவே முற்சித்த வண்ணம் இருந்தார்கள். முஸ்லிம்கள் அவர்களின் முயற்சிகளுக்குப் பலியாகி பல சமயங்களில் துண்டு துண்டாகச் சிதறினார்கள்.

ஒருகாலத்தில் முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் இணைந்து நின்றார்கள். (எதிரிகளுக்கு எதிரில் அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும்) அந்த ஒற்றுமையின் காரணமாக உலக சக்திகளுக்கிடையே மேலோங்கி நின்றார்கள்.

செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளோ, மஸ்ஜித்களோ அவர்களிடம் இல்லை. மஸ்ஜிதுந் நபவியில் விளக்கேற்றவும் அவர்களுக்கு வசதிகள் குறைவாகத்தானே இருந்தது. ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில்தான் அப்போது இஸ்லாத்தைத் தழுவிய தமீம் தாரீ அவர்கள் முதலில் அங்கு விளக் கேற்றினார்கள். அந்தக் கட்டத்தில் அராபியா முழுவதும் இஸ்லாத்தைத் தழுவியிருந்தது.

பல்வேறு சமுதாயங்கள் மொழி பேசுபவர்கள், கோத்திரங்கள் இஸ்லாத்தில் இணைந்தன. அவர்கள் ஒன்றோடு ஒன்று பிணைந்து ஒரே சமுதாயமாக விளங்கினர். ஆம்! அத்தகைய நிலை ஏற்பட்ட பிறகுதான் அப்புனித மஸ்ஜிதில் விளக்கேற்றப்பட்டது. அரேபியாவில் மட்டுமல்லாமல் அதன் சுற்றுப்புற நாடுகளிலும் இறுதித் தூதர் கொண்டு வந்த செய்தி (தூது) பரவிக் கொண்டிருந்தது. எங்கெல்லாம் இந்த நெறி சென்றதோ நம்பிக்கையாளர்கள் அங்கே சென்றார்கள். மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். ஒன்றாக இணைந்தார்கள்.

பெரும் தியாகங்களுக்குப் பிறகு தான் இந்தச் சமுதாயம் உருவாயிற்று. அந்த நபித்தோழர்கள் உறவினர்களைத் துறந்தார்கள். சகாக்களைத் துறந்தார்கள். சமுதாயம், தேசம், மொழி ஆகிய தடைகளை எல்லாம் மேலோங்கி எட்டுத் திசைகளிலும் பரவினார்கள். இந் நெறியைப் பரப்பினார்கள். தம்மிடம் இருக்கும்

அனைத்தும் இறைவனுக்கும், இறைத் தூதருக்கும் அர்ப்பணித்து விட்டார்கள். அந்த இறைவனின் உவப்பைப் பெறவே உழைத்தார்கள். இந்நிலையில் தன்னுடைய நலம், தன்னுடைய குடும்ப விவகாரம் என்று எதுவுமே எஞ்சி நிற்கவில்லை.

கொள்கையளவில் இவ்வாறு பிணைக்கப் பட்ட 'உம்மா' - இலட்சிய சமுதாயம் இதர தொடர்புகளுக்கெல்லாம் இரண்டாம் நிலையைத் தரும்போதுதான் உருவாகின்றது. அன்றைக்கு முஸ்லிம்கள் கொள்கையால் இவ்வாறு பிணைந்து நின்ற போது ஒரு சகோதரரின் காலில் முள் குத்தினாலும், அதனை அனைவரும் உணர்ந்தார்கள். இன்றோ நாம் எவ்வளவு பிரிந்து நிற்கிறோம் என்றால் நம்மில் பலர் கொல்லப்பட்டாலும் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

'உம்மா' என்பது ஒரு நாட்டை அல்லது ஒரு பிரதேசத்தை சார்ந்த மக்கள் குழுவின பெயரல்ல. மாறாக பல்வேறு நாடுகள், பல்வேறு திசைகளில் இருக்கும் மக்கள் (ஏகத்துவக்) கொள்கையின் அடிப்படையில் ஒன்று சேரும் போதுதான் 'உம்மா'வாக மலர்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நாட்டு மக்கள் தான் நம்மைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் கொண்டிருப்பவர்கள் 'உம்மா' வை சிதறியடிக்கும் குற்றத்துக்கு ஆளாகிறார்கள்.

இறைத்தூதரும், அவருடைய தோழர்களும் ஒற்றுமைக்காக உழைத்தது பிறகு வீணாகி விடுகிறது. ஆம்! இந்த 'உம்மா'வை சாகடிக்கும் நிலையில் கொண்டு வந்தது முஸ்லிம்கள் தாம். முஸ்லிம்கள் இவ்வாறு செயற்பட்ட பிறகுதான் மற்றவர்கள் அவ்வாறு செயற்படத் தொடங்கினார்கள்.

முஸ்லிம்கள் மீண்டும் ஒன்று பட்டு வாழ எண்ணினால் அதனைத் தடுத்திட முடியாது. அணுகுண்டுகளாலும், ராக்கெட்டுக்களாலும் அவர்களை அழித்து விட முடியாது. ஆனால், தேசிய, இன மாச்சரியங்கள் நமக்கிடையில் தலை தூக்கினால் பிறகு எந்த ஆயுதங்களும், படைகளும் இருந்தாலும் அவை நம்மைக் காப்பாற்றாது.

முஸ்லிம்கள் பிளவுபட்டு நிற்பதால் உலகம் முழுவதும் அவர்கள் கொடுமைக்குள்ளாக்கப் படுகிறார்கள். இபோதைய சூழ்நிலையின் பயங்கரத்தை நினைக்கும் போது எனது இதயமே வெடித்துவிடும் போல் இருக்கிறது.

நினைவில் கொள்ளுங்கள்! என்னுடைய நாடு, என்னுடைய ஊர், எனது மக்கள் என்ற வார்த்தைகள் எல்லாம் பிளவை நோக்கித்தான் இட்டுச் செல்கிகிது. இறைவன் மற்றெல்லா வற்றையும் விட இவற்றையே மிகவும் வெறுக்கின்றான்.

'உம்மா' இஸ்லாமிய சமுதாயம் அதன் எல்லாக் குழுக்களும் தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை களைந்து ஒரே லட்சியத்திற்காகத் தங்களை அர்ப்பணிக்கும் போது தான் உருவாக முடியும். பிளவை ஏற்படுத்துவது சமூகத் தீமை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

வணக்க வழிபாடுகள் மட்டுமே சமுதாயத்தை ஒன்றுபடுத்தப் போதுமானவையல்ல! உம்மத்துடைய ஒற்றுமையின் தேட்டம் நம்மிடையே தொடர்பு கொள்வோரிடம் நமது வழி முறையினை சீர்படுத்திக் கொள்வது, அவர்களுக்குரிய உரிமையை நிறைவேற்றுவது, உரிய மரியாதையை வழங்குவது, நமது சொந்த நலன்களை சமுதாய நலனுக்காக தியாகம் செய்வதுமேயாம். ஒரே லட்சியத்தின் பால் மக்களை ஒன்றிணைப்பதற்காக எப்படி அண்ணலாரும், அவர்தம் தோழர்களும் சகிக்க் முடியாத துன்பங்களை பொறுத்துக் கொண்டு செயலாற்றினார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

என்ன விலை கொடுத்தாவது நாம் ஒற்றுமையாக நிலைத்திருப்பது நம்மீது சுமத்தப் பட்ட கடமையாகும். பெருமானார் கூறுகிறார்கள்; இறுதித் தீர்ப்புநாளின் போது ஒரு மனிதன் விசாரணைக்காக இறைவன் முன் நிறுத்தப் படுவான். உலகில் அவன் எல்லா வணக்கங் களையும் செய்திருந்த போதிலும், இறைவனின் பழிப்புக்குள்ளாவான். தான் நிந்திக்கப்படுவ தற்குரிய காரணம் புரியாமல் அதிசயிப்பான். அவன் கூறிய சில வார்த்தைகள் சமுதாயத்தில் விரிசல் ஏற்படுவதற்கு காரணமாக இருந்ததால்

தான் இந்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படும். பிறகு வேறொரு மனிதன் விசாரணைக்கு அழைக்கப்படுவான். இவனோ மேற்குறிப்பிட்டவனை விடக் குறைவான வணக்கங்களையே செய்திருந்தபோதிலும் அதிகமான நற்கூலி வழங்கப்படுவான். "நான் என்னுடைய எந்தச் செயலுக்காக இவ்வளவு தாராளமாக கூலி வழங்கப்படுகிறேனே" என்று ஆச்சரியத்தில் விசாரிப்பான். அவன் ஒரு சந்தர்ப்பத்தில் செய்த ஒரு செயலோ அல்லது கூறிய சில வார்த்தைகளோ சமூகம் ஒன்று படுவதற்கு உதவியதே இதற்குக் காரணமாகும் என்று அவனுக்குக் கூறப்படும்.

உண்மையில் நமது நாவு சமுதாயத்தை ஒன்றுபடுத்துவதிலும் துண்டாடுவதிலும் பெரும் பங்கு வகிக்கிறது. சமூகத்தில் விரோதத்தை உருவாக்குவதற்கு நாவினால் உச்சரிக்கப்படும் சில வார்த்தைகளால் முடியுமெனில், அதே நாவினால் உச்சரிக்கப்படும் சில வார்த்தைகளால் ஏற்கனவே பகைமை பூண்டிருக்கும் மக்களின் உள்ளங்களையும் இணைப்பதற்குரிய வார்த்தைகளை மொழிய முடியும். எனவே நமது நாவினை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டியது அவசியமாகிறது. நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் இறைவன் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பதை மனதில் எப்போதும் பசுமையாக இருத்திக் கொள்ள வேண்டும்.

**"நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை இறுகப்பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள். மேலும் அல்லாஹ் உங்கள் மீது பொழிந்த அருட்கொடைகளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாய் இருந்த நேரத்தில் அவன் உங்களுக்கிடையே உளப்பூர்வமான இணக்கத்தை ஏற்படுத்தினான். எனவே அவனது அருளால் நீங்கள் சகோதரர் களாகி விட்டீர்கள். மேலும், நெருப்புப் படுகுழியின் விளிம்பில் நீங்கள் நின்றுகொண்டிருந்தீர்கள். அல்லாஹ் உங்களை அதிலிருந்து காப்பாற்றிவிட்டான்" (3:103)**

சீரிய முஸ்லிம் சமுதாயம் என்பது ஒன்றுபட்ட, வலிமை வாய்ந்த, சுபிட்சமான ஒன்றையே குறிக்கும். அது நல்லவை அனைத்தையும் செய்யும் படி உற்சாகமூட்டும் ; சரியான செயல்களை செய்வதற்கு வற்புறுத்தும்; தவறானவற்றை செய்வதை விட்டும் தடுக்கும்.

**"எவர்கள் தம்மிடம் தெளிவான அறிவுரைகள் வந்த பின்னர் தங்களுக்குள் கருத்து வேறுபாடு கொண்டு பற்பல பிரிவினராய் சிதறுண்டு விட்டார்களோ அவர்களைப் போல் நீங்களும் ஆகி விடாதீர்கள். (யார் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களோ) அவர்களுக்கு மறுமை நாளில் மாபெரும் தண்டனை உண்டு." (3:105)**

இஸ்லாத்தில் ஒற்றுமை மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எல்லா வகையான வணக்க வழிபாடுகளும் மக்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்திற்காகவே உள்ளது. தீய செயல்கள் ஒருவரை மற்றவரிடமிருந்து பிரித்து விடுகிறது. மறுமை நாளில் மக்களைப் பிரித்தாலும் மிகக் கொடிய குற்றத்தினைப் புரிந்தவர்களின் முகங்கள் கருமை படர்ந்து காணப்படும்.

திருக்குர்ஆன் மக்களிடையே தவறான கருத்துக்களை ஏற்படுத்தும் அனைத்து விஷயங்களையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

**"கிசுகிசுப்பது ஷைத்தானியச் செயலாகும். இறைநம்பிக்கை கொண்டோரை மனம் நோகச் செய்வதற்காகத்தான் அது செய்யப்படுகிறது. ஆயினும், இறைவனின் அனுமதியின்றி அதனால் அவர்களுக்குச் சிறிதும் நஷ்டம் ஏற்படுத்த முடியாது" (58:10)**

**"இறைநம்பிக்கையாளர்கள், ஒருவர் மற்றவருக்குச் சகோதரர் ஆவார்கள். எனவே, உங்கள் சகோதரர்களுக்கிடையே தொடர்புகளைச் சீர் படுத்துங்கள். மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் மீது கருணை பொழியப்படக் கூடும்" (49:10)**

**"இறை நம்பிக்கையாளர்களே ; எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம். எந்தப் பெண்களும் மற்றெந்தப் பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களா**

யிருக்கலாம். நீங்கள் ஒருவரையொருவர் குத்திப் பேசாதீர்கள். ஒருவருக்கொருவர் மோசமான பட்டப்பெயர்களைச் சூட்டி அழைக்காதீர்கள். இறைநம்பிக்கை கொண்டதன் பின்னர் மோசமான பெயர்களைச் சூட்டுவது மிகவும் கெட்ட விஷயமாகும். எவர்கள் இந்த நடத்தையை கைவிடவில்லையோ அவர்கள் தாம் கொடுமைக்காரர்கள்." (49:11)

"இறைநம்பிக்கை கொண்டவர்களே! அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்த்து விடுங்கள். ஏனெனில் சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன. மேலும் (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றிப் புறம்பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்துவிட்ட தன் சோதரனின் இறைச்சியை உண்ண விரும்புவாரா. என்ன? பாருங்கள் ! நீங்களே அதனை அருவருப்பாய் கருதுகின்றீர்கள்" (49:12)

ஒன்றுபட்ட இஸ்லாமிய சமுதாயம் மற்றெந்தப் பிரிவினரையும், தேசத்தவரையும் விட மேலானதாகத்தான் இருக்கிறது. எனவே நீதியுடன் நடந்து கொள்வதையும், சச்சரவுகளைத் தவிர்த்து சமாதான வழிமுறைகளைக் கையாளுபவரையுமே அதனிடம் எதிர் பார்க்கப்படுகிறது. ஏனெனில் சண்டையிடுவதைவிட சுமூகமாக இருப்பதே மேலானது.

சகமுஸ்லிமுக்கு உரிய மரியாதையை நாம் வழங்க வேண்டும். நாம் நம்மை இறைவனின் ஒரு தாழ்மையுள்ள அடிமை என்று கருதும்போது தான் இது சாத்தியமாகும்.

அதிகாரம் இறைவனின் வசம் மட்டுமே உள்ளது. அழியக்கூடிய எந்தவொன்றிடமும் அது இல்லை. நாம் நம்மை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணிக்கும் போதுதான் நமக்கு அவன் அருள் புரிகிறான். (தங்களை இறைவனுக்கு நெருக்கமான மக்கள் என்று கூறிக் கொண்டு மாறு செய்த யூதர்களுக்கு எப்படி இறைவன் தண்டனை வழங்கினானோ அதைப் போல்) நாம் அவனுக்கு எதிராக செயற்படும் போது நம்மிடம் ஏற்கனவே உள்ளவற்றையும் பறித்து விடுகிறான். அல்லாஹ் மனிதர்களை அவர்களுடைய உறவுமுறைகளைக் கொண்டு தீர்ப்பு வழங்குவதில்லை; மாறாக நமது செயல்களை கவனித்து மட்டுமே கூலி வழங்குகிறான்.

என்னருமைத் தோழர்களே! சுய சீர்திருத்தத்தினாலும், ஈமான் எனும் நம்பிக்கையாலும் நம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்த நம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம் சமுதாயம் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும். சக மனிதர்களுடன் பணிவுடன் நடக்க வேண்டும். பிற மக்களுக்கு மரியாதை வழங்க வேண்டும். இறைவனுக்கு முற்றிலும் பணிந்து நடக்க வேண்டும். தமது வாழ்வில் வாய்மையும், நீதியும் பரிணமிக்க வேண்டும். இத்தகைய உயர்ந்த செயல்முறைகளை முழுமையாக மேற்கொண்டு வாழும் மக்கள் ஒரு சிறிய பகுதியில் வாழ்ந்தாலும், அதுவே பிற பகுதிகளிலும் வாழ்வின் நடைமுறையாகிவிடும்.

தமிழில் : **T.K.T. ஷேக்அப்துல்லாஹ்**

## ஜிஹாத் - மதப்போர் அல்ல .....!

இஸ்லாம் பிரகடனப்படுத்தும் போராட்டம் உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டதாகும். இதனையே குர்ஆன் "அல்ஜிஹாத் ؛ பீஸபீலில்லாஹ்" (இறை வழியிலான அறப்போர்) என்று கூறுகின்றது.

தீவிரப்போக்கு கொண்ட மேற்கத்தியவாதிகள் குறிப்பிடுவது போல் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கும் மதப்போர் அல்ல இது. மதச்சுதந்திரத்தை வழங்கியுள்ள இஸ்லாத்தின் இயல்பும் அதுவல்ல. "மார்க்கத்தில் கட்டாயம் இல்லை." (2:256) என்று குர்ஆன் கூறுகிறது.

குர்ஆன் வசனங்கள் இவ்வாறு தெளிவாக இருக்கையில், ஜிஹாத் உயர்ந்த மனிதாபிமான இலக்குகளைக் கொண்டுள்ளது. என்பதில் சந்தேகம் ஏற்படமுடியாது.

ஜிஹாத்-

சிறப்பான நோக்கங்களைக் கொண்டது. இது பணத்துக்காக, அழிவு வேலைகளுக்காக, உலகில் உயர்வு பெறுவதற்காக, சமூக அந்தஸ்த்துக்காக அற்ப லாபங்களுக்காக மேற்கொள்ளப்படுவதல்ல.

இத்தகைய நோக்கங்களின் அடிப்படையில் போராடுபவன் இறைவனின் பாதையில் போராடும் முஜாஹிதும் அல்ல. அவனுக்கு நற்கூலியோ ஷஹீத் (வீரத்தியாகி) எனும் அந்தஸ்தோ கிடைக்கப் போவதுமில்லை.

முஸ்தபா ஸபாஈ

# கவிதைகள்

## அகதிப் பயணமாய்...............

அந்தப் புயல் வீசிய
தொன்னூறாம் ஆண்டின்
கறுப்பு மாதமது.
மனித உயிர்கள்
அடுத்துவரும்
'நாற்பத்தெட்டு மணி
நேரத்தில்' பணயம்
வைக்கப்பட்டன.
அராஜகர்களின்
அட்டகாசம் உச்சாணியில்
ஊசலாடிய நாழிகைகள்!
மறலியின் மரணவாகனம்
'பிக்-அப்' உருவில்
அவதாரமெடுத்த அந்த
(பு) தினங்கள்!
அடந்த காரிருள்
நாட்களில் நித்திராதேவி
எல்லோரையும் நிர்க்கதியாக
நிற்க விட்டாள்
மக்கள் மௌன விரதம்
கொண்டிருந்தனர்.
அதிகாலைவேளை
கால்நடையாக அணிவகுத்து
கடல் நோக்கி
கண்ணீர்ப்பயணம்.
தாய்நாட்டின்,
தமிழ் மண்ணின்,
சொந்த மண்ணின்,
சொர்க்க மண்ணின்
மகிமை அன்றுதான்
மனிதர்களின் மனதில்
மண்டியிட்டு நின்றது.
வளர்த்து விட்டதை
நினைத்து அப்போதுதான்
வருத்தப்பட்டார்கள்.
எங்கள் பணம்; அவர்களின் பையிலும்;
எங்கள்உடமை, அவர்களுக்கு
உரிமை மாற்றத்திலும்;
எங்கள் உரிமை, அவர்களின்
அராஜகத்திலும் புஷ்பமாகிப்போன
பொல்லாத நாட்களவை.
வெறுமையுடன் பயணம்
செய்த அந்தக் கடற் பயணம்,
அதுவொரு கண்ணீர்ப்பயணம்.
அப்போதுதான் புரிந்தது
கடல் நீர் ஏன் கரிக்கின்றதென்று?
அந்த அகதிப் பட(ல)ம்
கற்பனையில்
கண்ணீரைக் கரை புரண்டோடச்
செய்கிறது.
எங்கள் வரலாறு
எண்ணிலடங்காது, எழுதமுடியாது.
முடியாமல் போக
களைப்புடன் கறுப்புப்
பேனாவை கவலையுடன்
காலடியில் போடுகிறேன்.
அந்தோ! பேனா கூட அழுதுவிட்டது.
அகதிப் பயணம்
தொடர்ந்து கொண்டேயிருக்கிறது......
இந்த அமாவாசை வாழ்க்கை
எப்போது பௌர்ணமியாவது?
அல்லல்படும் அகதிகள்
எப்போது ஆனந்தமடைவது?
அராஜகர்களின் அட்டகாசம்
எப்போது அடக்கப்படுவது?
கேள்விகள் மட்டும்
முடிவிலிகளாக,
விடைகள் ஏனோ
பூச்சியமாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

ஏ.ஜீ.எம்.அரூஸ்
எருக்கலம்பிட்டி-04

## தோழர்களே புறப்படுங்கள் !

வறுமை வெள்ளம்
இதயங்களை இழுத்துச்
செல்லும் போது
பொறுமை எனக்கூறும்
எருமைகள்

அன்பைத்துடைத்தெறிந்து
உள்ளத்தை வெறுமையாக்கி
கருமையால் நிரப்பிக் கொண்ட
கருணையில்லாத மனிதர்கள்
மறுமையில் தீக்கிரையாகட்டும்

சமுதாய உணர்ச்சியற்ற
மரப்பட்டைகள்
இருந்தென்ன லாபம்-
திருந்தாத உள்ளங்கள்
இருந்தாலும் பாவம்!

சமுதாய எரிதலில்
சோம்பல் முறித்துக் கொண்டு
குளிர்காயும்
விறகுக் கட்டைகள்
ஏன் இன்னும்
சமுதாயக் கால்களாக
இருக்க வேண்டும்?

உழுத்துப் போன
சிந்தனைகளால்
பழுத்துப் போன
பழைய சம்பிரதாயங்களிற்கு
காணிக்கை போடும்
மனிதர்கள் ஏன்
இன்னும் மன்னிக்கப்படுகிறார்கள்?

செத்துக் கொண்டிருக்கும்
சமுதாயத்துக்கு
பற்கழன்று போன
வார்த்தைகள்
ஏன் இன்னும்
செப்புமொழியாகத் தெரிகிறது?

சொத்திக் காரணங்களைக் கூறி
புழுதி படிந்த கருத்துக்களை
வார்த்தைப் பின்னலாக்கி
சமூகத்தைச் சிக்கலாக்கி
வைத்திருக்கும் இவர்களை
இனியும் அங்கீகரிக்க
முடியாது.
நாங்கள் விழித்து விட்டோம்
தோழர்களே புறப்படுங்கள் !

ஏ. எல். ஸுஹைர் காரியப்பர்
ஜாமி ஆ நளீமியா

## தலை விதியா ?

தாயகத்தை இழந்து
'அகதி'க் கோலத்தில்
விடுதிகளிலும்
முகாம்களிலும்
உணவுக்காய்
ஊதியத்திற்காய்
பிறர்,
முகம் பார்த்துப்
கை பார்த்து
பரிதவிக்கும்
நிலையிலும்
நாம், முஸ்லிம் அகதிகள்;
விடிவுக்குக்
குரல் கொடுத்து
ஓய்ந்து விட்டோம்;
சுதந்திரத்திலும்
ஒரு தலையா?
இல்லை,
தலை விதியா ?

- சாரணா கையூம்

## வெற்றிக்காய் எழுந்திடு

அண்ணலும் அவருடன்
அண்டிக் கொண்டோரும்
அகதியாய்ப் போனசேதி
அடிமனதில் பதித்திடு

அடுத்து அங்கே
ஆனது என்ன?
அடிதடிக்களத்திலும்
அயராதுழைத்து
அந்தோ வெற்றி
அரியணை பெற்றனர்

உதிரம் அங்கு
கரை புரண்டோட
உடம்பை விட்டு
உயிர்கள் உதிர்ந்தன.

விடாமுயற்சி
வெற்றிக்கு வழி என
வீரமாய் நின்றனர்
தீனைக் காத்தனர்
மண்ணை மீட்டனர்

உறுதியாய் நில்
ஆயுதம் தாங்கிய
ஆயிரம் பேரை
ஆயுதமின்றி
அடித்தொடுக்கிய
முந்நூறு பேர்
எம் பரம்பரை தாம்

வல்லரசங்கே
வாயொலி எழுப்ப
ஆப்கானில்
ஆனது என்ன?......
காகம் துரத்தும்
கவணைக் கண்டு
கவசங்கள் விரண்ட
சேதி இங்கு
சொல்ல வேண்டுமா?......

கச்சிதமாய் நீ
கையில் இருக்கும்
விலங்கையுடைத்திட
வீரமாய் எழுந்திடு
வெற்றி நிச்சயம்

வேப்பங்குளம் – நௌபர் .ஏ.கபூர்

## பிரகடனம்

ஆத்மா வொன்றின்
அஸ்த்தமனத்திற்கு
முகில்கள்......
முகவரி பாடுகின்றன!
நீங்கள்....
பயங்கர வாதத்தால்
ஒதுக்கி விடப்பட்டாலும்
தீரமுள்ள
ஆண்மகன் தான் நாம் !
பொய்யனுக்கும்
பொறாமைக்காரனுக்கும்
தண்டனை வேண்டியதில்லை
தன் வினையே
தன்னைச் சுடும் !
உன்னைப் போல்
உள்ளங்கள்
குண்டுக்குப் பழியானாலும்
பின்னுள்ள
பிரசவங்களுக்குத்
தடையே இல்லை
உயிர் கொடுத்து
உயிர் விக்க
ஆயிரமாயிரமாய்
அர்த்தமுள்ள இளைஞர்கள்
அணி திரளுவார்கள்
உங்கள் பணியைத்
தொட்டுக் கொண்டு
தொடர்ந்து செல்ல! வாரீர்
மாய்ந்து போன
உயிருக்கு
மதிப்புக் கொடுத்து
மானத்தோடு
தலை நிமிர்த்துவோம் !
வாரீர்

எம். எப்.பிர்தௌஸ்
கிண்ணியா – 06

## சோதரிக்கு ஓர்மடல்

கௌரவமாய்
வாழ்ந்த – நீ
கண்ணீர் மல்க
குடிசைக் குள்ளே
குந்தியிருப்பதில்
எம் உள்ளம் உருகுது
★★★

நாட்டில் மட்டுமல்ல
நம் பூமி நெடுகிலும்
நம் சமூகம் தான்
அகதி என்ற பெயரில்
அவதியுறுகின்றனர்
★★★

கௌரவமாய் வாழ்ந்த
காலம் எங்கே
கேளுங்கள்
கடமையாம் யுத்தம்
எப்போது கை நழுவியதோ
அன்றே நாம்
இழிவுபட்டோம்
★★★

வீரமுள்ள தாயே
வீட்டில் உள்ள
காளை களை
கோழைகளாக்காது
சமூக விடுதலைக்காய்த்
தூண்டிவிடு
★★★

மஸினா ஹனீபா

# நோன்புப்பரீட்சை

மௌலானா மௌதூதி (ரஹ்)

ஒவ்வொரு வருடமும் முழுமையாக ஒரு மாதத்துக்குத் தொடர்ந்தாற்போல் முஸ்லிம்களின் ஈமானுக்கு நோன்பின் மூலம் தேர்வு வைக்கிறான் இறைவன்.

இந்தத் தேர்வுகளில் மனிதன் எந்த அளவு வெற்றி பெற்றுக் கொண்டு போகிறானோ அந்த அளவுதான் அவனுடைய ஈமானும் வலிமை பெற்றுக் கொண்டே போகும்.

இது தேர்வுக்குத் தேர்வு-போன்றது. பயிற்சிக்குப் பயிற்சி போன்றது.

யாரேனும் ஒருவரிடம் ஒரு பொருளை நீங்கள் அமானிதமாக ஒப்படைப்பதாக இருந்தால் அவருடைய நாணயத்தைப் பரீட்சை செய்து பார்க்கிறீர்கள்.

இந்தப்பரீட்சையில் அவர் முழு வெற்றியடைந்து தம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்ற பொருளுக்குத் துரோகம் செய்யவில்லை என்றால் அடைக்கலப் பொருளைப் பாதுகாக்கும் தகுதி இன்னும் அதிகமாக அவருக்கு வந்துவிடும். அவருடைய நாணயம் மேலும் வளர்ந்து கொண்டே போகும்.

இது போலவே இறைவனும் தொடர்ந்து ஒரு மாதத்திற்குத் தினம் 12-14 மணி நேரம் வரை நம் ஈமானின் உறுதி குறித்து கடும் பரீட்சை செய்கிறான்.

இந்தப்பரீட்சையில் நாம் தேர்ந்து விட்டால் இறைவனுக்குப் பயந்து மற்றப் பாவங்களிலிருந்தும் ஒதுங்கும் மனோபக்குவம் நமக்கு அதிகமாக ஏற்பட்டுவிடும்.

அனைத்து இரகசியங்களையும் அறிந்தவன் இறைவன் என்று நாம் நம்புகிறோம். எனவே மறைவான இடத்திலும் கூட அவனுடைய சட்டங்களை மீறக்கூடாது எனும் எண்ணம் நமக்குள் ஆழப்பதிந்து விடுகிறது.

நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையும் கூலியாகக் கிடைக்கின்ற அந்த மறுமை நாள் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் நம் நினைவில் இருந்து கொண்டே இருக்கிறது.

இறைவன் நடத்தும் இந்த நோன்புப்பரீட்சை இத்தகைய பயிற்சிகளையும் நமக்கு அளிக்கிறது.

சந்தா விபரம்

தனிப்பிரதி ரூபா 10/-

ஆறு இதழ்களுக்கான சந்தா ரூபா 72/-

M.O அனுப்பும் பொழுது: "AHATHI" NORTHERN MUSLIMS RIGHTS ORGANIZATION என்ற பெயருக்கு SUB POST OFFICE HORETUDUA MORATUWA என்ற விலாசத்துக்கு அனுப்பவும்

# வடமாகாண முஸ்லிம் அகதி மாணவர்கள் எதிர் நோக்கும் கல்விப் பிரச்சினைகள்

5

கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்

(இதழ் 5 ந்தின் தொடர்ச்சி)

## 4. கல்வி எதிர்காலமும் சமூகப் பிரச்சினைகளும்

100 அகதி மாணவர்களுக்கு 50 மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தவிர்த்துக் கொள்கின்ற போக்கு இன்று காணப்படுகின்றது. இதில் பாடசாலைக்கு முற்றாகச் செல்லாதவர்கள், பாடசாலைக் கல்வியை இடை நிறுத்துபவர்கள் ஆகியவர்கள் உள்ளடங்குவார்கள். இந்நிலை தொடரு மானால், அகதிகளின் எதிர்கால கல்விப் போக்கில்,

1. சராசரி எழுத்தறிவு வேகமாகக் குறைவடையும்.
2. இடைநிலை, உயர்நிலைக் கல்வி கற்போரின் விகிதம் குறைவடையும்.

கல்வியறிவு ஆற்றல் குறைந்த சமுதாயத்தில் பாரதூரமான சமூக, கலாசார பிரச்சினைகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இன்று முகாம் கலாசா ரத்தையொட்டியதான சமூக சீர்கேடுகளும், ஒழுக்கவீனங்களும் கல்வி ரீதியாக ஆரோக்கியமற்றுச் செல்கின்றன. சமுதாயப் போக்கினைக் காட்டும் குறிகாட்டிகளைப் போல் காணப்படுகின்றன. இவ்வகைப்பட்ட சமூக சீர்கேடுகளின் அதிகரிப்பு அகதிகள் வாழும் சுற்றுப் பிரதேசங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன.

அகதி முஸ்லிம்களைப் பொருத்தவரை கல்வி வீழ்ச்சியால் ஏற்படக் கூடிய மேற்குறித்த பாதிப்புக்கள் பாரதூரமான எதிர்கால விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. அகதிகள் தமக்கேற்பட்ட இன்னல்களை எதிர் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப் படுவார்கள். தமக்கு வரலாற்று ரீதியாக இணைக்கப்பட்ட அநீதியை சமாதானமாக, புத்திசாலித் தனமாக எதிர் கொள்ளும் திறனை இவர்கள் இழந்து விடுவார்கள். அவ்வாறு ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டால் அவற் றிற்குக் காரணமாக இருந்தவர்களின் "தாழ்ந்த நிலையான இலக்குகள்" வெற்றியடைந்ததாகக் காணப்படும். அது சமுதாய நீதி, நியாயம், உண்மைக்குப் பெருந் தோல்வியாக முடியும்.

ஆயின், அகதி முகாம்களின் கல்வி மேம்பாட்டின் மூலம் மாத்திரம் தான் அகதி மக்கள் மத்தியில் தெளிவான சிந்தனையும் தமது பிரச்சினைக்குச் சரியான தீர்வுகளையும் அகதி மக்களால் அடையாளம் காணப்பட முடியும். பொறுப்புணர்ச்சி கொண்ட தேசிய அரசாங்கம், சர்வதேச ஸ்தாபனங்கள், தனிப் பட்டவர் அகதி மக்கள் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் தரமான கல்வி வளர்ச்சி க்கும், சமூக, கலாசார மேம்பாட்டிற்கும் உதவ வேண்டும்.

### 5. அகதி மாணவர்களின் கல்வி வீழ்ச்சியைத் தடுக்க செய்யப்பட வேண்டிய வழிவகைகள்;

அகதிகளின் நிவாரணத்துக்காக அரசாங்கம், அரசாங்கம் சாராத ஸ்தாபனங்களும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறான முயற்சிகள் மத்தியிலும் அகதிகளின் ஆரோக்கியம், உறைவிடம், கல்வி, ஒழுக்கம் போன்றவை நாளாந்தம் மோசமடைந்து கொண்டிருக்கின்றன. நிவாரண முயற்சிகளுக்கு அகதிகளின் பிரச்சினைகளின் அதிகரிப்புக்கும் இடையிலான முரண்பாட்டுக்குக் காரணம் என்ன? அகதிகளின் நடைமுறைப் பிரச்சினை பற்றியும் எதிர்காலத் திட்டமிடல் பற்றியும் தெளிவான விளக்கமும், கொள்கையும் அகதி நிவாரணத்தில் ஈடுபடும் நிறுவனங்களால் பின்பற்றப்படவில்லையா? அகதி மக்களின் எதிர்கால நன்மை கருதி மேற்குறித்த வினாக்களுக்கு விடைகள் அறியப்பட வேண்டும்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களில் இருந்து வடமாகாண முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டு அபயம் தேடி வந்த காலத்தில் இருந்து இன்று வரையான மூன்று வருடங்களாகி விட்டன. இதுவரை காலமும் இவ்வகதிகளின் எதிர்கால நலனை அடிப்படையாகக் கொண்ட முழுமையான நிவாரண முறை அரசாங்கத்தாலும் அல்லது அரசாங்கம் சாராத ஸ்தாபனங்களினாலோ முயற்சிக்கப் படவில்லை. வடமாகாண முஸ்லிம்கள் "அகதிகளா?" அல்லது, "இடம்பெயர்ந்த வர்களா?" என்ற வரைவிலக்கணத் தெளிவின்மைக்கு மத்தியில் உடனடி நிவாரண உபாய முறைகளே இந்நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெளிவற்றநிலையில் திட்டமிடப்படாத ரீதியில் செயற்படுத்தப்பட்டு வந்த அகதி நிவாரணங்கள், அகதிகள் அவர்களது "பிரச்சினைகளில்" இருந்து மீட்சி பெற உதவவில்லை. மாறாகப் பிரச்சினைகள் அதிகரித்ததாகவும், புது உருவம் பெற்றதாகவும், மீட்சியடையாத நிலைக்கு அகதி மக்களை இட்டுச் செல்வதாகவும் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட தாத்பரியத்தினை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் கல்விப்பிரச்சினைகளில் இருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆயின், அகதிப்பிரச்சினைகள் ஒரு முழுமையான தூரதிருஷ்டியைக் கொண்ட தீர்வை வேண்டி நிற்கின்றன. அகதிகளின் கல்விப்பிரச்சினையும் அவ்வாறானதேயாகும்.

அகதிகளின் நிவாரண முயற்சிகளின் முரண்பாடுகளும், தெளிவற்ற தன்மையும் காணப்படும் இச்சந்தர்ப்பத்தில் அகதிகளின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு பின்வரும் உடனடிக் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இக்கட்டுரை சிபார்சு செய்கின்றது.

**1. உள்ளூர்ப்பாடசாலைகளின் அகதி மாணவர்களும் கற்கக்கூடிய வகையில் பாடசாலை வளங்களை அதிகரித்தல்.**

1.1 அகதிகளுக்கான மாலைநேரப் பாடசாலை முறைக்குப் பதிலாக மாற்று ஒழுங்கு முறை ஒன்றினை அறிமுகப்படுத்தல்.

1.2 அதற்காக அகதி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளூர்ப் பாடசாலைகளில் உள்ள பாடசாலைக் கட்டிடங்களை அதிகரித்தலும், அதே நேரம் பாடசாலைத் தளபாடங்கள், மற்றும் உபகரண வசதிகளை அதிகரித்தலும்.

1.3 உள்ளூர் அகதி ஆசிரிய வளத்தின் உச்சப்பயன்பாட்டினை உள்ளூர் அகதி மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளை உள்ளூர்ப் பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொடுத்தல்.

1.4 மேற்குறிப்பிட்ட முறைகள் மூலம் அகதி மக்களினதும், உள்ளூர் மக்களினதும் பரஸ்பர உறவையும், ஒற்றுமையையும் வலுப்படுத்தல்.

**2. அகதி முகாம்களில் கல்விக்குப் பொருத்தமான சூழலை ஏற்படுத்தல்.**

2.1 அகதி மாணவர்கள் இரவு நேரங்களில் கற்பதற்கு அகதி முகாம்களில் வெளிச்ச வசதி, தளபாட வசதியுடன் கூடிய "கற்கும் கூடம்" போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2.2 இம்முகாம் கல்வி கற்கும் கூடங்களை முதியோர் கல்விக்காகவும், பெண்கள் கல்விக்காகவும் பயன்படுத்தல்.

2.3 முகாம் சூழலில் பாலர் பாடசாலைகளையும், குர்ஆன் மத்ரசாக்களையும் ஏற்படுத்தல்.

2.4 முகாம் சூழலில் காணப்படும் சமுதாய வளங்களை (கல்வி கற்றவர்கள்) முகாம் கல்விக்காக திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்தல்.

2.5 முகாம் சூழலில் கல்வி வளர்ச்சியையும் சீர்திருத்தத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் இன்றைய முகாம் சூழலில் காணப்படும் சீரற்ற நிலையை அகற்றி, அகதிகளின் வாழ்க்கையில் நம்பிக்கையையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த உதவுதல்.

**3. கல்விக்கான பெற்றோரின் செலவைக் குறைத்தல்**

3.1 மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களுக்கான உதவிகளை அதிகரித்தலும் பரவலாக்கலும்

3.2 க.பொ.த. (சாதாரண, உயர்தர), பல்கலைக்கழக, தொழில் நுட்ப, அரபு மத்ரசா போன்ற கல்விக்குப் புலமைப் பரிசில்களை அதிகரித்து, கல்விக்கான ஊக்கத்தைத் தூண்டுதல்.

3.3 5ம் ஆண்டுப்புலமைப்பரிசில் க.பொ.த. சாதாரண, உயர்தரம் போன்ற பொதுப்பரீட்சைகளில் தோற்றும் மாணவர்களுக்கு வசதியாக டியூசன் வசதிகளை அதிகரித்தலும், அதனைப் பிரதேச ரீதியாகப் பரவலாக்கி அதிகமான அகதிகள் பயன்பெறும் வாய்ப்பை உருவாக்கலும்.

**4. நிவாரண உதவி கிடைக்கப்பெறாத முகாம் பிரதேசத்துக்கு விசேட கவனம் செலுத்துதல்.**

4.1 அநுராதபுரம், குருணாகல் போன்ற மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களுக்கு பாலர் பாடசாலைகள் பாடசாலை உபகரணங்களுக்கான நிவாரணம் டியூசன் வசதிகள் போன்ற கல்வி உதவிகள் அளிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் அரசாங்கம் சாராத உதவி நிறுவனங்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

4.2 மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு நேரடியானதும், மறைமுகமானதுமான சகலவித உதவிகளும் செய்யப்பட வேண்டும்.

அவ்வுதவிகள் மிகவும் திட்டமிட்ட வகையில் அமைய வேண்டும். அவ்வுதவிகள் மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களிடையே இன ஐக்கியத்துக்குப் பங்கம் விளைவிக்காத முறையிலும், அதே வேளை முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்.

**5. பிரதேச ரீதியாக அளிக்கப்படும் கல்வி சார் உரிமைகள் அகதி மக்கள் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அங்கு கிடைக்கக்கூடியதான ஒழுங்கைச் செய்தல்.**

5.1 மாவட்ட ரீதியாக அளிக்கப்படுகின்ற பல்கலைக்கழக அனுமதிகள் போன்றவற்றின் உரிமைகள் அகதி மாணவர் எப்பிரதேசத்தில் இருந்தாலும் அவர்களது பிறப்புப் பிரதேசத்தைக் கொண்டு வழங்க வேண்டும்.

5.2 வடமாகாணத்துக்கான ஆசிரியர் நியமனங்களின் போது வடமாகாண முஸ்லிம்களுக்கும் அளித்து, அவர்கள் அகதிகள் வாழும் பிரதேசத்தில் சேவையாற்றும் வசதிகளைச் செய்தல்.

5.3 இதேபோல் ஏனைய தொழில்களுக்கான போட்டிப் பரீட்சைகளையும் வடமாகாண முஸ்லிம் மாணவர்கள் இருக்கும் இடங்களில் நடத்தி அவர்களுக்கும் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்து கல்வியை ஆர்வப்படுத்தல்.

**6. அகதிகளின் கல்வி வளர்ச்சிக்கு யார், எதைச் செய்ய வேண்டும்.**

அகதி முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வுதவிகளில் ஈடுபடுபவர்கள் என்ற வகையில் பிரதானமாக மூன்று பிரிவினரை அடையாளம் காணலாம். அவை,

1. அரசாங்கம்
2. அரசாங்கம் சாராத ஸ்தாபனங்களும், தனிப்பட்ட கல்வி கொடையாளிகளும்
3. அகதி உள்ளூர்ப் பெற்றோர்கள்

மேற்குறித்தவர்களின் கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகள் இணைப்பற்ற வகையில் காணப்படுகின்றது. இக்கட்டுரையில் பின்வரும் பகுதிகள் யார்? எதனை, எவ்வாறு செய்வது பொருத்தமானது? எவ்வாறு மேற்குறித்த கூட்டு முயற்சியை வெற்றிகரமாக மேற்கொள்ளலாம் என்பதை விளக்குகின்றது.

**1. <u>அரசாங்கம்:</u>**

இலங்கை மக்களின் ஆரம்ப இடைநிலை, உயர்கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு செயற்பாடுகளை அரசாங்கம் செய்து வருகின்றது. பாடசாலைக் கல்விக்காக அரசாங்கம் பாடசாலைக் கட்டிடங்களை அமைத்து, தளபாட உபகரணங்களை வழங்கி ஆசிரியர்களை நியமித்து இந்நாட்டின் கல்வியை ஊக்கப்படுத்தி வருகின்றது. இதேபோல் வடமாகாண முஸ்லிம் அகதிகளுக்கும் மேற்குறித்த கல்வி வளங்களை அவர்கள் எங்கிருந்தாலும் அப்பிரதேசங்களில் கிடைக்கக் கூடியவாறான ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். "இடம் பெயர்ந்தவர்கள்" என்ற கண்ணோக்கில் பாரிய கல்வி வசதிப்பொறுப்புகள் பலவற்றை அரசாங்கம் சாராத ஸ்தாபனங்களிடம் ஒப்படைத்து விட்டு அரசாங்கம் பாராமுகமாக இருந்து விடக்கூடாது. நீண்டகால நோக்கில் திட்டமிடப்பட்ட கல்வி வழங்கல் முறை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அரசியல் பலம் குறைந்த அகதிகளின் உரிமைக்குரல் தேசிய சர்வதேச

மட்டங்களில் ஒலிக்க உள்ளூர் சர்வதேச சமூகநல, மனித உரிமை ஸ்தாபனங்கள் குரல் கொடுக்க வேண்டும்.

2. அரசாங்கம் சாராத உதவி ஸ்தாபனங்களும், தனிப்பட்ட கல்விக் கொடையாளிகளும்

மேற்குறிப்பிட்டவர்கள் அகதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், விழிப்புணர்ச்சிக்கும் பல்வேறு வகையில் உதவலாம். இன்று பல்வேறு பாடசாலை உபகரணங்களை வழங்கியும், பாலர் பாடசாலை டியூசன் போன்ற கல்வித் தேவைகளை நிறை வேற்றியும் உதவி வருகின்றார்கள். இவ்வுதவி களை அளவு ரீதியாக மேலும் அதிகரிக்கவும் பரவலாக்குவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதே நேரத்தில் அகதி முகாம் சூழலையும் கல்வி வாய்ப்பினை அதிகரிப்பதற்கு "சமுதாயப் பள்ளிமுறை" (முகாமில் பெண்கள் முதியோர், போன்றோரின் கல்வி, தொழில் பயிற்சி என்பவற்றுக்காக முகாமையும் முகாம் சூழலையும் கல்வி ரீதியாக இணைப்புறச் செய்தல்) மூலம் அகதிப் பெற்றோர், அகதி மாணவர்களிடத்தில் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

3. அகதி-உள்ளூர் பெற்றோர்

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. முகாம் சூழலில் அகதி-உள்ளூர்ப்பெற்றோர் இணைந்த கூட்டு முயற்சி இப்பிரதேச கல்வி வளர்ச்சிக்கு மிக அத்தியவசியமாகக் காணப்படுகின்றது. அகதிகளும், உள்ளூஎர் மக்களும் ஒரே கல்விச் சமூகச் சூழலில் வாழ்கின்றார்கள். ஒரு சமுதாயத்தில் (உதாரணமாக அகதிகள்) ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றைய சமுதாயத்தை (உதாரணமாக உள்ளூர்) பாதிக்கக்கூடியதான சூழ்நிலை காணப்படுகின்றது. புரிந்துணர்வு அடிப்படையில் அகதி - உள்ளூர் மக்கள் இணைந்து பிரதேசக் கல்வி வளர்ச்சிக்காக செயற்படுவது இரு சாராருக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

## முடிவுரை

வடமாகாண அகதி கல்விப்பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதனை அகதி முஸ்லிம்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் காணப்படும் இட நெருக்கடி, இடைநிலை உயர்தரக் கல்விக்கான போதிய வாய்ப்பின்மை, கல்வி வயதில் பாடசாலை செல்லாத அகதி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் போன்றவற்றில் இருந்து கண்டு கொள்ளலாம். கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது மேற்குறித்த நிலை அகதிகளின் கல்வித்தரத்தில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதிகரித்து வரும் இக்கல்விப் பிரச்சினைகள் அகதிகளின் கல்வியை சரியான முறையில் திட்டமிடப் படாமையினால் உருவானவையாகும். சரியான திட்டமிடல் இடம் பெறாமைக்குக் காரணம் தேசிய மட்டத்திலும் சர்வதேச நிறுவனங்களின் கண்ணோக்கிலும் "வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் நிலை" பற்றிய தெளிவின்மை காணப்படுவ தாகும். மேற்குறித்த அடிப்படைப் பிரச்சினைகள் சரிவரத்தீர்க்கப்படாவிட்டால், மேற்கொள்ளப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் அகதி மக்களின் கல்வியில் நீடித்த தாக்கத்தினை ஏற்படுத்தாது.

முற்றும்

*உண்ணுகிறாய் : உறங்குகிறாய்*
*விலங்கினைப்போல்:*
*உறுபயன் தான் யாதோ சொல்?*
*உன்னில் நீ தங்கா திருந்திடிலோ*
*உன்வாழ்வு உனக்கீயும் பயன் யாதோ?"*
*அல்லாமா இக்பால்*

# உங்கள் கவனத்திற்கு...

மௌலானா யூசுப் இஸ்லாஹி

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாளை இறைவனின் முன்னிலையில் நிற்கத்தான் போகிறோம். அதற்காகத்தான் இன்று விரைந்து சென்று கொண்டிருக்கிறோம். பார்த்துக் கொண் டிருக்கும் போதே திடீரென்று நாம் இறைவனிடம் சேர்ந்து விடுவோம்.

நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் போன்றோரைப்பார்க்கச் செல்லும் போது அவர்க ளுக்குப் பிடித்தமான பொருள்களை வாங்கிக் கொண்டு போகிறோம் அல்லவா? நாளை இறைவனின் முன்னிலையில் நாம் போக வேண்டியிருக்கிறதே அவனுக்கு அன்பளிப்பாக எடுத்துச் செல்ல நாம் எதைச் சேகரித்து வைத்திருக்கிறோம். ?

இன்று இறைவனின் பகைவர்கள் அனைத்து திசைகளிலிருந்தும் 'தீன்' மீதும் 'தீனை'ப்பின்பற்று வோர் மீதும் பாய்ந்து கொண்டிருக்கின்றனர். 'தீனை' அழிப்பதற்கும் அதனைப் பின்பற்றுவோரை இழிவு படுத்துவதற்கும் அசத்தியவாதிகள் அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர். சத்தியத்தின் விரோதிகள் தம் ஆதிக்க போதையில் யாதொரு கட்டுப்பாடுமின்றி வெறி பிடித்த யானையைப் போல அலைந்து கொண்டிருக்கின்றனர். தீனைப்பின்பற்றுவோரை தவிடுபொடியாக்கிடத் துடித்துக் கொண்டிருக் கின்றனர். உலகம் முழுவதிலும் இன்று சத்தியத்திற்கும் அசத்தியத்துக்கும் இடையில் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இந்த தீனைக் காப்பாற்று வதற்காகவும் அது தாழ்த்தப்படுவதைத் தடுப்பதற் காகவும் நம் உயிரைக் கொடுக்க முன்வரவேண்டும். தீனை மேலோங்கச் செய்ய கடுமையாக உழைக்க வேண்டும். இறைவழியில் இறுதிச் சொட்டுக் குருதியையும் சிந்தி விடுவதே நமது கடமையும் பொறுப்புமாகும். சந்தேகமின்றி நாம் தொழுகிறோம். நோன்பு நோற்கிறோம் ஸகாத் கொடுக்கிறோம், ஹஜ்ஜும் செய்கிறோம் ஓரளவுக்கு மக்கள் சேவையிலும் ஈடுபடுகிறோம்.

ஆனால் ...

மார்க்கத்தின் பகைவர்களை எதிர்த்துப் போராடியதால் ஏற்பட்ட விழுப்புண்கள் ஏதேனும் நம் உடலில் உண்டா?

அந்தப்போரில் ஏற்பட்ட காலத்தின் வலியைத் தாங்காது நம்முடைய வேதனைக் குரல் வெளிவந்துள்ளதா?

இறைவழியில் போரிட்டபோது – ஜிஹாத்தில் ஈடுபட்டபோது – நம்முடைய காலில் சிறிய முள்ளாவது குத்தியிருக்கிறதா?

இறைவனின் பகைவர்களுடன் மோத வேண்டும் என்ற விருப்பமும் துடிப்பும் நம் உள்ளத்தில் இருக்கிறதா?

இன்று தீனுடைய நிலைமையைக் கண்ட நம்முடைய கண்கள் சிந்திய ஒரு துளிக்கண்ணீராவது நம்மிடம் உண்டா?

நாளை இறைவனிடம் அளிப்பதற்கு மிகவும் மதிப்பு வாய்ந்த அன்பளிப்புகள் இவைதாம். இந்தக்காலத்தில் வாழும் மூமின்களிடம் இத்தகைய அன்பளிப்புகளைத்தான் இறைவன் எதிர்பார்க்கிறான். இவை இல்லை என்றால் மற்ற எந்த அன்பளிப்பையும் இறைவன் நிராகரித்துவிடவும் கூடும்!

சிந்தியுங்கள்!

இத்தகைய அன்பளிப்புகளை நாம் கொஞ்சமாவது சேகரித்துக் கொண்டிருக்கிறோமா?

# முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்கள் அன்றும் இன்றும்

நீராவியூரான்

ஒரு ஜனநாயக நாட்டில், அதன் எந்தப்பாகத்திலும் அந்நாட்டின் பிரஜைகள் பூரண சுதந்திரத்துடனும் அடிப்படை மனித உரிமைகளுடனும் வாழும் உரிமை எப்போதும் உண்டு. அந்நாட்டில் வாழும் உரிமை, பேச்சுரிமை, கல்வியுரிமை, சொத்துக்களைத் தேடும் வைத்திருக்கும் உரிமை, அரசியல் உரிமை, பாதுகாப்பு போன்ற அடிப்படை உரிமைகளை அந்த ஜனநாயகம் வழங்க வேண்டும். இத்தகைய ஜனநாயகத்தையே இன்றைய உலக நாகரீக மனித சமுதாயம் போற்றிப் புகழ்கின்றது.

ஆனால் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களை விட்டு காரணங்கள் ஏதுமின்றி அண்மைக்காலத்தில் (1990) பலாத்காரமாக விரட்டப்பட்டு அகதிகளாக பல்வேறு பாதிப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் மத்தியில் பரிதாபத்துடன் வாழ வேண்டிய நிர்ப்பந்த நிலை சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையின் வடமாகாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரியதாகும். வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் , மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்கள் பரவலாக பாரம்பரியமாக தமிழ் மக்களுடன் மிகவும் ஐக்கியமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். இத்தகைய வடமாகாண முஸ்லிம்கள் இன்று தாயக மண்ணில் இல்லை இவர்களின் குரல்களும் அகதிமுகாம் குடிசைக்கு வெளியே ஒலிக்கப்படுவதுமிகவும் குறைவு. இவ்வட மாகாண முஸ்லிம்களின் பிரதேசரீதியான நிலைப்பாடுகளை ஓரளவுக்கு வெளிக் கொண்டு வரும் நோக்குடனேயே இச்சிறிய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. முதற் கட்டமாக முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் பாரம்பரியத்தைப்பற்றி நோக்குவோம்.

## புவியியற் பின்னணி

முல்லைத்தீவு மாவட்டமானது அதன் எல்லைகளாக கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலையும் வடக்கில் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களையும் மேற்கில் மன்னார், வவுனியா மாவட்டங்களையும் தெற்கில் திருகோணமலை மாவட்டத்தையும் கொண்டது. அதன் மொத்தப் பரப்பளவு 1966km ஆகும். இங்கு கரைதுரைப்பற்று (முல்லைத்தீவு), மாந்தை கிழக்கு, புதுக் குடியிருப்பு, துணுக்காய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் காணப்படுகின்றன. அண்மையில் ஒட்டிசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. முல்லை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 77,512 ஆகவும் இதில் முஸ்லிம்களின் சனத்தொகை 3,816 ஆகவும் காணப்படுகிறது (குடிசனமதிப்பீடு 1981) இங்கு விவசாயத்திற்கேற்ற சிறந்த மண்வளம் , கடற் றொழிலுக்கேற்ற பெரும் கடல் (Sea) சிறுகடல் (Lagoons) வளம், எங்கும் பரவலான நன்னீர் வளம், பாரிய நீர்த்தேக்கக் குளங்கள், ஆறுகள், நீரருவிகள், இயற்கையான செழுமை மிகு நீரூற்றுக்கள், இயற்கைக்காடுகள், வனவிலங்குகள் ஆகிய பல தரப்பட்ட செல்வங்களைக் கொண்டிருப்பதனால் வளம்மிகுந்த பிரதேசமாகக் காணப்படுகிறது. இப்பிரதேச முஸ்லிம்களின் வதிவிடங்கள் வளமிக்க கேந்திர நிலையங்களில் அமைந்துள்ளமை தனிச்சிறப்பை அளிக்கின்றது.

## முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச சமய, அடிப்படையிலான சனத்தொகை விபரம்

| மாநகர, நகர, உ-அ-அ-பிரிவு பட்டினசபை M.C,U.C,T.C A.G.A.DIVISION | மொத்தம் | முஸ்லிம் | இந்து | ரோமன் கத்தோலிக்கர் | மற்றும் கிறிஸ்தவர் | பௌத்தர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டத்தின் மொத்தம் | 77,512 | 3,816 | 60,666 | 11,597 | 440 | 988 | 05 |
| முல்லைத்தீவு பட்டினசபை | 7,202 | 690 | 3,802 | 2,550 | 18 | 140 | 02 |
| கரைதுரைப்பற்று உ.அ.அ (முல்லைத் தீவு) | 28,645 | 2,852 | 19,924 | 5,340 | 160 | 366 | 03 |
| மாந்தை கிழக்கு உ.அ.அ.பி | 5,653 | 11 | 5,411 | 148 | 48 | 35 | - |
| புதுக்குடியிருப்பு உ.அ.அ.பி | 28,715 | 229 | 24,642 | 3.268 | 176 | 400 | - |
| துணுக்காய் உ.அ.அ.பி | 7,297 | 34 | 6,887 | 291 | 38 | 40 | - |

(குடிசன மதிப்பீடு 1981)

முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் கரைதுரைபற்று (முல்லைத்தீவு) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழ்ந்துள்ளமையை சிறப்பாக அவதானிக்க முடிகிறது. ஏனைய பிரிவுகளில் கணிசமான அளவில் பரவலாக வாழ்ந்துள்ளனர். முல்லைத்தீவு நகரம், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் குமாரபுரம், கல்விப்பாடு, கணுக்கேணி, முறிப்பு, முத்துஐயன்கட்டு குடியிருப்புக்களாக காணப்படுறது. மேலும் மணற்குடியிருப்பு, சிலாவத்தை, உப்புமாவெளி, 5ம்கட்டை, உடுப்புக்குளம், குமுளமுனை, விசுவமடு, களிக்காடு, ஒதியமலை போன்ற பல்வேறு பகுதிகளிலும் கணிசமானளவு முஸ்லிம்கள் 1990 இல் வெளியேற்றப்படும் வரையிலும் பாரம்பரியமாக வாழ்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு நகருக்கு அண்மையாக கல்லிப்பாடு, மணற்குடியிருப்பு, செவ்வபுரம் என்பனவும் முல்லை நகரிலிருந்து கொக்கிளாய் வீதியாக உப்புமாவெளி, சிலாவத்தை, உடுப்புக்குளம், 5ம் கட்டை ஆகிய பகுதிகள் காணப்படுகின்றன. முல்லை நகரிலிருந்து முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் 3ம் மைல் கல்லிலிருந்து வலதுபுறம் ஹிஜ்ராபுரமும் நீராவிப்பிட்டியும் இடது புறம் குமாரபுரமும் காணப்படுகிறது. 4ம் மைல் கல்லிலிருந்து வலது புறம் தண்ணீரூற்று இடதுபுறம் கணுக்கேணி ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன. இப்பகுதியிலேயே பெரும்பான்மையான முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளனர். தண்ணீரூற்றுக்கும் நீராவிப்பிட்டிக்குமிடையே மேற்காக அழகிய இயற்கை வனப்பு நிறைந்த "நீராவி" எனும் நீரூற்றுக்காணப்படுகிறது. இது அக்கிராமங்களிற்கு நீர் வளத்தையும் அழகையும் அளிக்கிறது. தண்ணீரூற்று குமுளமுனை வீதியில் 3ம் மைல் கல் பகுதியில் முறிப்பு எனும் விவசாயக் குடியேற்றம் காணப்படுகிறது. முஸ்லிம்களின் பிரதான குடியிருப்புக்களைச் சூழ நீலகண்டபுரம், முள்ளிய வளை வற்றாப்பளை, கணுக்கேணி போன்ற தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்கள் காணப்படுகின்றன. முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் இம்மாவட்டத்தின் முக்கிய இடங்களில் அமைந்துள்ளமையையும் முஸ்லிம் மக்களிடையே புவியியல் ரீதியில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது. இன்று இம்முஸ்லிம்கள் தாயக மண்ணில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றுப் பின்னணி (தேசப்படம்)

முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம் பரியத்தை நோக்குகையில் ஆரம்பகாலத்தில் முஸ்லிம்களின் குடியிருப்புகள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தமையை அவதானிக்க முடிகிறது. பனங்காமம் (இறம்பாகம்) எனும் விவசாயக்குடியிருப்பிலும் கிடைச்சிகுளம் (கரச்சிக்குடியிருப்பு) எனும் பகுதியிலும் சுதேசிகளான முஸ்லிகள் வாழ்ந்துள்ளனர். இக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் கல்லுத் தாண்டாமடு, தட்டாவியல்; போன்ற விவசாயப்பகுதியில் அமைந்திருந்தமையையும் அவதானிக்க முடிகிறது முல்லைத்தீவு மாவட்டத்தின் தென்மேற்காகக் காணப்படும் அடர்ந்த காட்டுப்பிரதேசத்தில் பழம் பெரும் குளங்கள் பல கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. நித்தகைக்குளம் கதிர்மீரா குளம் , மந்திரிக் குளம் , தண்ணி முறிப்புக் குளம் , (தண்ணிமுறிப்புக் குளம் 1953–1957ம் ஆண்டுப்பகுதியில் பாரிய நீர்ப்பாசனக் குளமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிட்டதக்கது குருந்துக்குளம் போன்றன அவற்றில் சில வாகும். இவற்றில் கதிர் மீரா குளம் ஆரம்ப கால முஸ்லிம்களின் விவசாயக் குடியிருப்புக்களில் ஒன்றாகக் கருதமுடிகிறது. இப்பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் பனங்காம் புல்மோட்டை ஆகிய பகுதிகளுக்கு குடிபெயர்ந்ததாக முன்னோர்களின் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது. புல்மோட்டை முஸ்லிம் களுக்கும் முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதி முஸ்லிம்களுக்கு மிடையில் பரம்பரை பரம்பரையாக நிலவிவரும் உறவு முறை களைக் கொண்டு புல்மோட்டைக்கு ஒரு பகுதி முஸ்லிம்கள் இடம் பெயர்ந்துள்ளமையையே அவதானிக்க முடிகிறது.

போத்துக்கேயர், ஒல்லாந்தர்களின் கால கட்டத்தில் யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட போது இவர்களில் ஒரு பகுதியினர் பூநகரி, கரச்சி, சங்கத் தாவயல, சுண்டிக்குளம் போன்ற பகுதிகளில் படிப்படியாகக் குடியேறி பின்னர் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களுடன் சேர்ந்துள்ளனர் என்பதையும் அவதானிக்க முடிகிறது. இதற்கு ஆதாரமாக முல்லை -யாழ்முஸ்லிம்களுக்கிடையில் நிலவிவரும் பாரம்பரியமான உறவு முறைகளையும் சுண்டிக்குளப்பகுதியில் முஸ்லிம்களுக்கு காணிகாணப்படுகின்றமையையும், சுண்டிக்குளத்தில் கடற்றொழில் செய்வதற்கு தண்ணீரூற்று முல்லைத்தீவுப் பிரதேச முஸ்லிம்களை மாத்திரம் சுண்டிக் குளப்பிர தேசமக்கள் வழமையாக பல்லாண்டு காலமாக அனுமதி வழங்கி வருவதையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன் ஜனாப் அப்துர்றகீம் அவர்களினால் எழுதப்பட்ட "யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறு" எனும் நூலின் பக்கக் குறிப்புகளையும் அதற்கு ஆதாரமாகக் கொள்ள முடிகிறது யாழ்ப்பாணத்திலிருந்து வந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் கிடைச்சிக் குளம் (கரைச்சிக்குடியிருப்பு). பகுதியிலும் ஏனையோர் பனங்காமம் (இறம்பாகம்) பகுதியிலும் குடியேறி இருக்கின்றனர். பின்னர் கிடைச்சிக்குளம் பகுதியிலிருந்து முல்லைத்தீவு நகருக்கும் பனங்காமம் (இறம்பாகம்) பகுதியிலிருந்து கணுக்கேணி ,தண்ணீரூற்றுபகுதிகளிற்கும் முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர். சமகாலப் பகுதியில் தமிழ் மக்களின் குடியேற்றங்கள் முள்ளியவளை,மாமூலை, வற்றாப்பளை, குமாரபுரம் போன்ற பகுதிகளில் அமைந் திருக்க வேண்டும்.

இதற்குப் பின்னர் முஸ்லிம்களின் குடியிருப்புகள் படிப்படியாக நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம், குமாரபுரம், முத்தையன்கட்டு, முறிப்பு போன்ற பகுதிகளுக்கு விரிவடைந் துள்ளமையை அவதானிக்க முடிகிறது. காலப்போக்கில் வெளிப்பிரதேசங்களுடன் உள்ள வியாபார, திருமணம் போன்ற பல்வேறுபட்ட தொடர்புகளினால் குடி

பெயர்தல் குடியேறுதல் என்பன மிகச் சிறியளவில் நிகழ்ந்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தை பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்ட சுமார் 1400 குடும்பங்களுடைய 6,000 முஸ்லிம்கள் அகதிகளாக பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இம்முஸ்லிம்களின் சனத்தொகை மொத்த சனத் தொகையில் கிட்டத்தட்ட 6% ஆகும் (வரலாற்றுத் தொகுப்புகளிலிருந்தும் முன்னோர்களின் தகவல்களிலிருந்தும் பெறப்பட்ட சுருக்கமாகும்)

**கலை கலாசாரம்**

முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களிடம் சிறப்புமிக்க கலை, கலாசாரப் பண்பாடுகளை அவதானிக்க முடிகிறது புலமைத்துவம் சுதேசவைத்தியம், சீனடி சிலம்படி, கோலாட்டம், கராட்டி நாட்டுப்பாடல்கள் போன்றகலைகள் காணப்படுகின்றன. அது பெரும்பான்மையான இந்துக்களுக்கு மத்தியிலும் சிறப்பான முறையில் இக் கலாசாரத்தை பேணிமக்கள் வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இப்பிரதேசத்தில் வாழ்ந்த புலவர்களில் மீராசாகிபு- மிஸ்கீன் புலவர் (1886- 1982) என்பவர் குறிப்பிடத்தக்கவர் இவர் “காலக் குழப்படி” “கலியுகம்” “சூறாவளிக் கொத்து” கம்படிப்பாட்டு, அருவி வெட்டுப்பாடல்கள், நாட்டார் பாடல்கள், போன்ற பல்வேறு தொகுப்புகளை இயற்றியுள்ளார் இவரது தொகுப்புகள் சமூகச் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதை தூண்டுவனவாகவும், இயற்கை அனர்த்தங்களை விபரிப்பன வாகவும், வரலாற்றுச் சம்பவங்களை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன. எளிய அமைப்பில் நகைச்சுவையுடன் பாடி இலகுவில் மக்கள் மனதில் பதியவைத்து சிறப்புப்பெற்றுள்ளார். அத்துடன் சூறாவளிக் கொத்து, கலியுகம், காலக் குழப்படி போன்ற செய்யுள்களை அச்சிட்டு 1974 ம் ஆண்டு வற்றாப்பளை அம்மன்கோயில் பொங்கலின் போது பாடிப்பாடி விற்றுள்ளார். இவரது அதிகமான செய்யுள்கள் உரிய முறையில் பேணப்படாமையினால் அழிவடைந்துள்ளமை கவலைக்குரியதாகும். பாரம்பரியமாக இம்மக்களிடையே புகழ்பெற்ற சுதேச மருத்துவக்கலை காணப்படுகிறது , சித்த ஆயுள்வேத, யூனானி வைத்தியர்கள் இருந்திருக்கிறார்கள் . அசனார்மரைக்காயர், சுலைமான் லெவ்வை, மிஸ்கீன் (புலவர்) பைக்கீர், முகைதீன் , லெப்பை நெய்னாசாகிபு என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தற்போது லெவ்வை நெய்னா சாகிபு என்பவர் (சாய்பு அப்பா) சிறப்பான முறையில் விஷக்கடி வைத்தியம் செய்து வருகிறார் . முல்லை மாவட்டத்திலேயே சிறந்த விஷக்கடி வைத்தியராக கடமையாற்றிய இவரின் வீட்டில் இரண்டு சிகிச்சையளிக்கும் ‘வாட்’ பகுதி காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. பக்கீர் என்பவரின் மகனான அப்துல் ஹமீது என்பவரும் மிஸ்கீன் புலவரின் பேரரான வஹாப் என்பவரும் தற்போதும் வைத்தியம் புரிகின்றார்கள். 1987 ம் ஆண்டு IPKF-LTTE யுத்தம் 1990ம் ஆண்டு LTTE இலங்கை இராணுவ யுத்தம் ஆகிய வற்றின் போது ஏற்பட்ட இரண்டு இடப்பெயர்வுகளின் போதும் அதிகமான வைத்தியக்கலை நூல்கள் அழிக்கப் பட்டுள்ளமை கவலைக்குரியதாகும்.

சீனடி சிலம்படி எனும் விளையாட்டுக்கலை பாரம்பரியமாக முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகிறது. இதில் நீளக்கம்பு விளையாட்டு, வாள் விளையாட்டு, குத்துச்சண்டை (மல்யுத்தம்), புலிவிளையாட்டு, மறுவிளையாட்டு, தீப்பந்தம் சுற்றுதல், கொடிவரிசை போன்ற பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றன. திருமண வைபவங்கள், மீலாத்தின விழாக்கள், முக்கியஸ்தர்களின் வரவேற்பு இடங்கள், ஓய்வு நேர உடற்பயிற்சிகள் போன்றவற்றில் விளையாடப்பட்டன. விளையாடப்பட்டும் வருகின்றது. * சீனடி சிலம்படியைப்போன்றே கோலாட்டமும் சிறப்பான இடத்தை

வசிக்கின்றது. இக்கோலாட்டமானது இசைப்பாட்டுடன் கூடிய நடனத்துடன் விளையாடப்படுகின்றது. கோலாட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் பாடல்களில் சில மிஸ்கீன் புலவரினால் இயற்றப்பட்டவையாகும் தற்போதும் அகதி முகாம்களில் சிறுவர்கள் விளையாடி மகிழும் காட்சி மிக அழகானது.

முஸ்லிம்களின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவதாக கலாசாரப்பண்பாடுகள் அமைந்துள்ளன. பெரும்பான்மை யான இந்துக்களுக்கு மத்தியில் சிறுபான்மையான முஸ்லிம்கள் தனித்துவத்துடன் கலாசாரத்தைப் பேணிப்பாதுகாத்துள்ளனர். திருமண வைபவங்கள், சமய நிகழ்ச்சிகள், விசேட வைபவங்கள் போன்றவற்றில் மாத்திரமின்றி நாளாந்த வாழ்விலும் சிறப்பான முறையில் பேணியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஹறாம், ஹலால் பேணி உண்ணும் வழமை முஸ்லிம்களுக்கு உரித்தான விசேட பாரம்பரிய உணவு வகைகள் என்பன இம்மக்களிடையே காணப்படுகின்றன. உடைகளைப் பொறுத்தவரையில் பொதுவாக ஆண்கள், சாரம், சேட், ஜீன்ஸ், தொப்பி அணியும் வழக்கமும் பெண்கள், சாரியுடுத்தி முக்காடு அணிவதும், வழமையாகக் காணப்பட்டது. ஆனால் "தப்லீக் ஜமாஅத்" போன்றவற்றின் நடவடிக்கைகளினால் ஆண்களில்கணிசமானோர் ஜுப்பா எனும் உடையணிந்து தொப்பியணியும் வழமையும் பெண்கள், பர்தா அணியும் வழமையும் நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றது. திருமணங்கள் வீடுகளில் ஓரளவு ஆடம்பரமாக நடைபெற்று வந்த போதிலும் அண்மைக்காலங்களில் பள்ளிவாசலில் மிகவும் எளிமையாக நடைபெற்று வருகிறது. வீடுகளில் எளிமையான இஸ்லாமிய கலாசாரத்தை உயிர்ப்புடன் பேணும் வழமையையும் அவதானிக்க முடிகிறது. இஸ்லாமிய வணக்க முறைகளையும் கலாசாரத்தையும் பேணுவதில் மஸ்ஜிதுகளும், குர்ஆன் மத்ரஸாக்களும் அளப்பரிய சேவையாற்றியுள்ளன. இப்பிரதேசத்தில் ஆறு ஜும்ஆப் பள்ளிவாசல்களும் ஏழு ஆரம்பக்குர்ஆன் மத்ரஸாக்களும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் அதிகமான உலமாக்கள் காணப்படு கின்றமையும் தப்லீக் ஜமாஅத் போன்றவற்றின் பணிகளும் உயிர்ப்புடன் இஸ்லாமியக் கலாசாரப் பண்பாடுகளைப் பேண வழியமைத்தன. ஆரம்பகாலத்தில் திருமணத்தின் போது தாலிகட்டல், வெற்றிலை வைத்து மாப்பிள்ளையை வரவேற்றல், மேளக்கச்சேரி போன்ற இந்துக் கலாசாரம் சிறிதளவு ஊடுருவிக் காணப்பட்ட போதிலும் மேற்குறிப்பிட்ட சமூகச் சீர்திருத்த இயக்கங்களினாலும் மார்க்க அறிஞர்களினாலும் சீர்திருத்தப்பட்டு இஸ்லாமியப் பண்பாடுகளுக்கு புத்துயிர்ப்பு அளிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. எல்லா முஸ்லிம் கிராமத்திலும் கட்டுக்கோப்பான முறையில் பள்ளிப்பரிபாலனலசபை மூலம் இஸ்லாமியக் கலாசாரம் பேணக்கூடிய நிர்வாக முறைமைகள் காணப்பட்டன.

இம்மாவட்ட முஸ்லிம்கள் அகதிகளாக இடம்பெயர்க்கப்பட்ட பின்னர் சொந்தப் பிரதேசத்திலிருந்த இஸ்லாமிய சமூக அமைப்பு முற்றாக சீர்குலைக்கப்பட்டன. மக்கள் பல பிரதேசங்களிலும் சிதறி அகதி முகாம்களில் வாழ வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் முகாம்களில் குறைந்த இடவசதியும் ஒரு சில மலசல கூடங்கள் கிணறுகளையும் அதிக எண்ணிக்கையான மக்கள் நாளாந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்த வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இடவசதியின்மை, வறுமை, உதவிகள் பற்றாக்குறை போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் ஆரம்பக்குர்ஆன் மத்ரஸா கல்வி பாதிக்கப்பட்டது. பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அரபிக் கலாசாலை மாணவர்களின் மார்க்கக் கல்வி பாதிக்கப்பட்டது. இந்நிலைகளால் மார்க்க அறிவு குறைந்த இருண்ட சமுதாயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் அபாயத்திற்கு இட்டுச் செல்கின்றது. பொருளாதாரச் சுமை,

வறுமை, போன்ற காரணங்களினால் அடக்கமாக வீடுகளில் இருந்து வீட்டுப்பணிகளைக் கவனித்த முஸ்லிம் பெண்களில் ஒரு பகுதியினர் கூலி வேலைகளுக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடியும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பெண்கள் தொழில் புரிய ஆரம்பிக்கும் போது பிள்ளைகளை உரிய முறையில் பேணி வளர்த்து நெறிப்படுத்த முடியாமையால் சிறார்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பது கவலையைத் தருகின்றது. இவ்வாறான பல்வேறுபட்ட காரணங்களினால் இஸ்லாமிய கலாசாரப்பண்பாடுகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலை வட பகுதியிலிருந்து இடம் பெயர்க்கப்பட்ட எல்லாப்பிரதேச மக்களுக்கும் பொதுவான தாகக் காணப்படுகின்றது.

முல்லை மாவட்ட முஸ்லிம்களின் மொழியாற்றலிலும் சிறப்பான அம்சங்களை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக தண்ணீர் ஊற்று, ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி பகுதிகளிலுள்ள முஸ்லிம்களின் தமிழ் மொழியாற்றல் அப்பிரதேச தமிழ் மக்களின் மொழியாற்றலிலிருந்து வேறுபடுத்த முடியாத அளவுக்கு ஒன்றிணைந்து காணப்பட்டுள்ளது. சிறுபான்மை முஸ்லிம்கள் பெரும்பான்மை தமிழ் மக்களுடன் மிகவும் நெருக்கமான உறவு காணப்பட்டமையால் இத்தகைய மொழியாற்றல் காணப்படுவதாக கருத முடிகிறது. இன்னும் கூட இப்பிரதேச மக்களின் மொழியாற்றலை அவதானிக்கும் எவருக்கும் யாழ்ப்பாணத்துத் தமிழ் பேசுகின்றீர் என இலகுவாகக் கூறிவிடுகின்ற மையைக் காண முடிகின்றது. முல்லை நகர் முஸ்லிம்களின் மொழியாற்றல் பெரும்பாலும் தண்ணீரூற்றுப்பிரதேச மக்களின் மொழி யாற்றலை ஒத்திருக்கின்ற போதிலும் சற்று வித்தியாசப்பட்ட யாழ்ப்பாண முஸ்லிம்களின் தமிழ் மொழியாற்றல் காணப்படுவதையும் சிறப்பாக அவதானிக்க முடிகின்றது.

| முஸ்லிம்களின் பிரதான குடியிருப்புக்கள் | ஜும்ஆப் பள்ளிகள் | தக்கியாப் பள்ளிகள் | ஆரம்ப குர்ஆன் மத்ரஸாக்கள் | முஸ்லிம் பாடசாலைகள் | ஸியாரம் | மையவாடி |
|---|---|---|---|---|---|---|
| 1. தண்ணீரூற்று | 01 | - | 01 | 01 | - | - |
| 2. நீராவிப்பிட்டி | 01 | 01 | 02 | - | - | - |
| 3. ஹிஜ்ராபுரம் | 01 | - | 01 | - | - | - |
| 4. குமாரபுரம் - | - | - | - | - | 01 | 01 |
| 5. முறிப்பு | 01 | 01 | 01 | - | - | - |
| 6. முத்து ஐயன்கட்டு | 01 | - | 01 | 01 | - | 01 |
| 7. முல்லைத் தீவு | 01 | - | 01 | 01 | 01 | 01 |
| 8. கல்விப்பாடு | - | 01 | - | - | - | - |

- தொடரும் -

# 'பத்ரு' யுத்தம் தரும் முக்கிய படிப்பினைகள்

* அல்லாஹ் மீது அசையாத நம்பிக்கை வைத்தல்
* தற்பாதுகாப்பு நடவடிக்கை விசுவாசிகளுக்கு இன்றியமையாதது.
* மஷுராவின் அடிப்படையிலேயே தீர்மானம் எடுத்தல்.
* எதிரியின் பொருளாதார வழிகளைத் தடை செய்வது
* எதிரிக்கு உதவும் நண்பர்களைத் திசை திருப்புவது
* எதிரியைத் தனிமைப்படுத்துவது
* தளபதியும் சாதாரண போராளியைப் போன்று நடந்து கொள்வது
* யுத்த சூழ்நிலையிலும் வாக்குறுதி மாறாமை.
* போர்ப் பொருட்கள் சமமாகப் பங்கிடப் பெறுதல் வேண்டும்.
* போர்க்கைதிகளை நல்ல முறையில் நடத்தியமை. அவர்களில் உள்ள ஆற்றலை பயன்படுத்திய விதம்.
* ஐக்கியத்தை உருவாக்குதல்.

அகதியின் கடைசிப்பக்கம்....!

## “அருகே வர வேண்டுகிறோம்...”

இப்போது எல்லாம் மனதுக்கு ஆறுதலாய் மாறிக்கொண்டு வருகிறது. எங்குமே சமாதானக் கோஷங்களும் ஊர்வலங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

“தெற்கிலிருக்கும் நாம் வடக்கிலிருக்கும் உங்களுடன் கலந்து கொள்ளும் காலம் வெகு தூரத்திலில்லை.” என்ற தென்னிலங்கை வாழ் மக்களின் சமாதான வெளிப்பாடு சந்தோஷிக்க வைக்கிறது. இதனோடு நாமும் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

“வடக்கிலிருந்த நாம்

துரத்தப்பட்டவர்களாய் தெற்கிலுள்ளவர்களுடன் கலந்த நாம், மீண்டும் எம் சொந்த மண்ணோடு கலக்க விரும்புகிறோம்.

அதற்கான நாட்களும் அருகே வர வேண்டுகிறோம்.”

சகல தரப்பினது விட்டுக்கொடுப்புகளுடனும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நான்காம் கட்டத்தை அடைந்திருக்கின்றன. வடகிழக்கு வாழ் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை புறமொதுக்கியதாகவே இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அமைந்தன..”

இதுவரை எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாதது அல்லது கலந்து கொள்ள அனுமதிக்கப்படாதது கவலை தருகின்றது.

பிரச்சினை புலிகளுக்கும் அரசுக்கும் தான் என்ற கொள்கையில் சம்பந்தப்பட்டவர்கள் இருப்பின் மீண்டும் நாம் கேள்விக்குள்ளாக வேண்டியதே!

முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்தச் சொல்லும் வேண்டுகோள்கள் பல இடங்களிலிருந்தும் தற்போது புறப்பட்டுள்ளன. எனினும் இது எழுதப்படும்வரை நான்காவது சுற்றில் கலந்து கொள்பவர்கள் பற்றியும் அதில் முஸ்லிம்கள் உள்ளார்களா என்பது பற்றியும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அத்தோடு..

யாழ் சென்றிருந்த சமாதானத் தூதுக்குழுவிலும் பத்திரிகையாளர் என்ற வகையில் நிலார் காஸிம் (விவரண) என்பவர் தவிர்த்து வேறு முஸ்லிம்கள் யாரும் இடம் பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகள் வருவதை அனுமதிக்கவில்லையா? அல்லது அரசு தடுக்கிறதா? அல்லது முஸ்லிம்கள் பயப்படுகிறார்களா... அல்லது முஸ்லிம்கள் சமாதானத்தில் நாட்டம் கொள்ளவில்லையா? இவைதான் கேள்விகளாக எழுகின்றன.

“ஜலன்ட்”டின் முஸ்லிம் பத்திரிகையாளரொருவர் யாழ்ப்பாணம் சென்று திரு அண்டன் பாலசிங்கத்தை பேட்டி கண்டு வந்திருக்கிறார் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

“முஸ்லிம்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது எங்களது கடமையாகும்.” என்று அவர் சொல்லியிருப்பது மனதுக்கு நீர்வார்க்கிறது. எம் மக்களை சந்தோஷப்படவும் வைத்திருக்கிறது. சிலர் வரிந்து காட்டிக் கொண்டு செல்லவும் தயாராகிறார்கள் என்பதும் தெரிய வருகின்றது.

எல்லோரது ஆசையும் மீண்டும் தாயகம் செல்வதே... அதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனாலும் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது இவ்விடத்தில் நாம் நிதானம் தவறி நடந்து விடக்கூடாது.

அனுப்பிய போது வருவதும், கூப்பிட்டவுடன் போவதுமான நிலைப்பாட்டில் நாம் இருக்கக் கூடாது.

எல்லோரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற சமாதானம் உறுதிப்படுத்தப்பட்டு நாம் அழைக்கப்பட்டால் சிறந்த நிதானித்த வழிகாட்டல் மூலமே அதனைச் செயற்படுத்த நாம் தயாராக வேண்டும். இல்லாவிட்டால் எப்போதும் போல் கைசேதப்பட்டுக் கொள்ளவே வேண்டி வரும்.

நடப்புக்கள் பற்றிய நல்ல அவதானங்களுடன் எம்மைப்பற்றிச் சிந்தித்தவர்களாய் சமாதானத்தை வரவேற்போம்.!

## 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'

## NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION" (N.M.RO)

பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.
2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.
3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
4. வட மாகாணத்தில் மீளக்குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத் தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

**மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும் .**

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளிவிபரங்களைத் திரட்டுவது.
2. அவர்கள் மத்தியில் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.
3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.
4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.
5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்
6. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**செயலாளர்,**

**வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு**

**15 ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை,**

**கொழும்பு - 06.**

# இளைஞனே விழித்தெழு!

ஓ இளைஞனே
உன் இருண்டு போன இதயத்தில் பாபத்தின் அரசாட்சி!
உன் ஒளியிழந்த கண்களில் காமத்தின் சாபம்!
உன் நயம் இழந்த செவியில் சாபத்தின் அலறல்!
உனது துருப்பிடித்த எண்ணங்கள்?
கற்பனையில் காலத்தைக் கழித்து, நிஜத்துக்கு நீதி கேட்கிறாய்!
மாயத்தை நாடி ஆறுதல் தேடுகிறாய்!
விதியின் மீது பழி சுமத்தி வீதி தோறும் வலம் வருகிறாய்!
தாறுமாறாக தவறுகின்ற தத்துவங்களில் தடுமாறித் தத்தளிக்கிறாய்!
சோகத்தை உனதாக்கி அதில் நீந்த முனைகிறாய்!

ஓ ஆற்றலின் வடிவே!
நீ சீறுகின்ற நாகம்
வீறு பெற்ற வேங்கை
பேராற்றல் கொண்ட வேழம் நீ........ ஆனால்
உண்மையை உணர்ந்த உள்ளமே உனது
வாழ்க்கையை ஏசிப்பேசுவானேன்!
சிறகொடிந்த பறவையோ நீ – இல்லை
இல்லை ! எனின்
உன் வீரத்துக்கு ஏன் இந்த உறக்கம்!
உன் சிந்தனைக்கு ஏன் இந்தச் சிறை!
ஓ செயலின் பிறப்பிடமே! எழுந்து நில்
உன்னைச்சாடுகின்ற சமுதாயத்திற்கு சாட்டையடி கொடுக்க!
உன்னை அண்டி வாழும் ஒட்டுறுஞ்சிகளுக்கு சாவுமணி அடிக்க!
ஆதிக்க அராஜகத்துக்கு சமாதி கட்ட!
அறைகூவல் விடும் சமூகச் சீர்கேடுகளை சீரழிக்க
இளைஞனே எழுந்து நில்!
இறையடிமை நீ ஆதலின் இஸ்லாத்தை
நிலவுலகில் நிறுவும் வரை எனக்கேது
உறக்கமென சூளுரை!

அ. கையாஸ்

அகதி இதழ் 15 A, ரோஹினி வீதி, கொழும்பு 6 வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் ஏ.ஜே. பிரின்ட்ஸ் இல, 1B பீ.ரி.டி சில்வா மாவத்தை, தெஹிவளையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.